

முச்சந்தி முரளி

"திரும்பக் கொண்டுவாற ஆவணங்களை, எதுக்காம் கரண்டை கட் பண்ணிப் போட்டு கள்ளக்கோழி பிடிக்கிற மாதிரி கொண்டுபோனவை?"

Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 112 | வியாழக்கிழமை | பங்குனி 5 ஆம் நாள் 18 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

### ஐ.சி.சி.யே ஒரே வழி

# 46/1 ஜெனிவாத் தீர்மானத்தை அடியோடு நிராகரிக்கின்றோம்

## தமிழர்கள் ஓரணியில் திரண்டு நல்லூரில் எழுச்சிப் பேரணி



யாழ்ப்பாணம், மார்ச் 18

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சார்பில், ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் 46/1 தீர்மானம் நிறைவேற்றப்படுவதை அடியோடு நிராகரிக்கின்றோம். இலங்கையை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும். இதுதான் தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கை. சர்வதேச சமூகம் இதனைச் செயற்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி பல ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு நல்லூரில் நேற்று மாபெரும் எழுச்சிப் பேரணியை நடத்தினர். 19 ➤

## வடக்கில் மேலும் 9 தொற்று

### அவர்களில் மூவர் பல்கலை மாணவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

வடமாகாணத்தில் மேலும் 9 பேருக்குக் கொரோனாத் தொற்றிருப்பது நேற்று உறுதிப்படுத்தப் பட்டது. அவர்க 19 ➤

## கஞ்சாவை விநியோகித்தாரென ஓட்டோ சாரதி நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாணத்தில் கஞ்சா போதைப்பொருளை விநியோகித்து வந்தார் என்ற குற் 19 ➤

## இந்திய ஆதரவு எமக்கு தேவை!

### அமைச்சர் பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 18

'இலங்கையின் அண்டை நாடாகவும் அதிக நட்புள்ள நாடாக 19 ➤

## தமிழர் தாயகத்தின் அவலக்குரலுக்கு செவிசாய்க்க வேண்டும் சர்வதேசம்!

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 18

'இலங்கை அரசாலும் அதன் படைகளாலும் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கோரி தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் எழுப்பும் அவலக்குரலுக்கு, சர்வதேச சமூகம் செவிசாய்க்க வேண்டும் - இவ்வாறு கோரிக்கை 19 ➤



### பிணைமுறி மோசடி:

## ரவி உள்ளிட்ட 8 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 18

மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 8 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 20 ➤



## இலங்கையை காட்டிக்கொடாதீர்!

### தமிழர்களிடம் ராஜபக்ச அரசு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 18

'அரசு வழங்கியுள்ள சுதந்திரத்தைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கில் அரசுக்கு எதிராகவே போராட்டங்களை நடத்தி ஐ.நா.விடம் இலங்கையைக் காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்தையே தமிழ் மக்க 19 ➤

## அ'புரம் கொண்டுசெல்லப்பட்ட ஆவணங்கள் திரும்ப வருமாம்!

### அமைச்சர் மஹிந்தானந்தவும் சொல்கிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலிருந்து அனுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்ட ஆவணங்கள் மீண்டும் கொண்டுவரப்படும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். காணி அமைச்சருடன் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு உரையாடிய பின்னர் அவர்



இதனைக் குறிப்பிட்டார். கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து 20 ➤

### இலங்கைக்கு எதிரான பிரேரணை

## பிரிட்டன் நாடாளுமன்றில் இன்று விவாதிக்கப்படும்!!

லண்டன், மார்ச் 18

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளுக்கான பிரிட்டனின் கடப்பாடு என்பவை குறித்து பிரிட்டன் நாடாளுமன்றில் இன்று விவாதம் நடத்தப்படவுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக பிரிட்டனின் தலைமையில் பிரேரணை முன் 19 ➤

# சுகாதாரத் தொண்டர் விடயத்தை ஜனாதிபதியுடன் பேசுகின்றேன்

*யாழ்.வந்த அமைச்சர் மஹிந்தானந்த உறுதி*

*சுகாஷிடம் வாயை மூடுமாறும் சினந்துகொண்டார்*

**யாழ்ப்பாணம், மார்ச் 18**

**யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று நடைபெற்ற சுகாதாரத் தொண்டர்களின் ஆர்ப்பாட்டத்தில் சட்டத்தரணி சுகாஷை வாய் மூடச்சொல்லி சண்டை பிடித்தார் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே. அதன் இறுதியில், சுகாதாரத் தொண்டர்களின் விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசுகின்றேன் என்றும் தொண்டர்களிடம் உறுதிமொழி வழங்கிச் சென்றார்.**

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக மூன்று அமைச்சர்கள் மற்றும் 6 இராஜாங்க அமைச்சர்கள் பங்குபற்றிய கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டம் முடிவடைந்து அமைச்சர்கள் பட்டாளம் பிரதான வாயில் ஊடாக வாகனங்களில் வெளியேறினர். அந்த நேரம் அந்த வாயில்களில் குவிந்துநின்று வாயில்களை வழிமறித்து நின்று, வடக்கு மாகாணத்தில் நியமனம் இடைநிறுத்தப்பட்டிருக்கும் சுகாதாரத் தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களை விலத்திக்கொண்டு அமைச்சர்கள் பயணித்த வாகனங்கள் வெளியே நகர முற்பட்டபோது, சுகாதாரத் தொண்டர் ஒருவர் வாகனத்தின் குறுக்கே வீழ்ந்து வழிமறித்தார். "எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் அல்லது என் மீது வாகனத்தை ஏற்றிச் செல்லுங்கள்" என்று அந்த நபர் கூறினார். போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஏனையவர்களும் வாகனத்தின் முன்பாக வீழ்ந்துகிடந்தவருக்கு அருகில் நின்றவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து வாகனத்திலிருந்து கீழே இறங்கிய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, சுகாதாரத் தொண்டர்களுடன் கலந்துரையாடினார். தமக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த நியமனக் கடிதங்களை சுகாதாரத் தொண்டர்கள் அமைச்சரிடம் காட்டினர். இந்த நியமனங்களை உடன் நடைமுறைப்படுத்த வழிவகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

நியமனக் கடிதத்தை ஆராய்ந்த அமைச்சர், குறித்த கடிதங்கள் தேர்தல் நடைபெற்று ஓரிரு தினங்களில் வழங்கப்பட்டுள்ளன எனவும், இது தேர்தல்கால நியமனங்கள் என்பதால் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும், இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்கின்றேன் என்றும் கூறினார்.

இதன்போது தலையிட்ட சட்டத்தரணி சுகாஷை, ஆறு வகையான வேலைகளுக்குரிய நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டினார். இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் மஹிந்தானந்த, குறித்த நியமனங்கள் எப்போது வழங்கப்பட்டன என்று வினவ, கடந்த வருடம் ஜனவரி 13ஆம் திகதி வழங்கப்பட்டன என்று தொண்டர்கள் தெரிவித்தனர் .

இதன்போது மஹிந்தானந்த அளுத்கமகே, இவை தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த வேலைகள் என்று தெரிவித்தார். அதன்போது குறுக்கிட்ட சுகாஷ் அனைத்தும் வேலைகள் தான் அனைத்தும் தொழில்கள் தான் என்றார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், "இங்கே அரசியல் கதைக்க வேண்டாம்" என்று கூறினார். இதன்போது, இங்கு அரசியல் கதைக்கவில்லை எனவும் சுகாதாரத் தொழிலாளர்களுக்காகவே கதைக்கின்றேன் என்றும் சுகாஷ் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த மஹிந்தானந்த அளுத்கமகே, நீங்கள் இங்கே கதைப்பதானால் நான் இங்கிருந்து போய்விடுவேன். இது தொடர்பில் கவனம் செலுத்தமாட்டேன் என்று தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து சுகாதாரத் தொழிலாளர்கள் அமைச்சரின் காலில் வீழ்ந்தனர். சட்டத்தரணி சுகாஷ் கருத்து தெரிவிக்க முயன்றபோதும் மஹிந்தானந்த அளுத்கமகே, "நீங்கள் சத்தம் போடுவதானால் நான் ஒன்றும் செய்யப்போவதில்லை" என மீண்டும் கூறினார். மேலும் "நான் உங்களுக்கு உதவ வந்துள்ளேன். பொன்னம்பலம் போல அரசியல் செய்வதானால் நான் ஒன்றும் செய்யப் போவதில்லை. நீங்கள் வாயை மூடுங்கள்" என்று சுகாஷை நோக்கிக் கூறினார்.

பதிலுக்கு சுகாஸும் அமைச்சரைப் பார்த்து, "நீங்கள் வாயை மூடுங்கள்" என்றார். இதனைத்தொடர்ந்து சுகாஷை அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவினர் அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து சுகாதாரத் தொண்டர்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர், "பொலிஸாரை வரவழைத்து இந்த இடத்திலிருந்து உங்களை வெளியேற்ற என்னால் முடியும். எனினும், நான் அவ்வாறு செய்யவில்லை. நான் உங்களுக்கு உதவி செய்ய வந்துள்ளேன். நான் ஜனாதிபதியுடன் பேசுகிறேன். ஒன்று அல்லது இரண்டு கிழமைகளில் உங்களை அங்கு அழைத்து ஜனாதிபதியுடன் கலந்துரையாட வழிவகை செய்கின்றேன்." என்று தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து சுகாதாரத் தொண்டர்கள் குறித்த வாயிலை விட்டு விலகிச் சென்றனர். (த-319-26-320)

## ஊடகவியலாளரிடம் பொலிஸ் விசாரணை

மட்டக்களப்பு மாவட்ட சுதந்திர ஊடகவியலாளர் ஒருவர் பொலிஸாரால் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடவியலாளர் ஒன்றியத்தின் பொருளாளரும் உழைக்கும் ஊடகவியலாளர் சம்மேளனத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவருமான புண்ணியமூர்த்தி சசிகரன் எனும் ஊடகவியலாளரே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

நேற்று முற்பகல் 10 மணி தொடக்கம் 11.30 மணி வரை அவர், மட்டக்களப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் உள்ள குற்ற விசாரணைப்பிரிவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

நேற்றுமுன்தினம் ஊடகவியலாளரின் வீட்டுக்குச் சென்றிருந்த பொலிஸார், விசாரணைக்கான அழைப்பை வழங்கியிருந்த நிலையிலேயே, நேற்று அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதன்போது, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தை நடத்தியது நீங்களா?, வெளிநாட்டு சக்திகளுடன் தொடர்பா?, விடுதலைப் புலி ஆதரவாளர்களுடன் தொடர்பா?, மாவட்டம் தாண்டி ஏன் ஊடக கடமைக்குச் சென்றீர்கள்? என்பவை உட்பட பல்வேறு கோணத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்று ஊடகவியலாளர் தெரிவித்தார்.

### கண்டனம்

இதேவேளை, அந்த ஊடகவியலாளர் மீதான விசாரணையானது ஊடகவியலாளர்களை அச்சுறுத்தம் செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டித்துள்ளது.

புதிய அரசு ஆட்சியைப் பொறுப்பேற்றது தொடக்கம் ஊடகவியலாளர்களுக்கான அச்சுறுத்தல்கள் பல்வேறு வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபடும்போது அவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுப்பது எதிர்காலத்தில் ஜனநாயக நாட்டில் ஜனநாயகம் கேள்விக்குறியாகும் நிலையேற்படும். என்றும் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

## சங்கீத பூசணம் காலமானார்

சங்கீத பூசணம் சு.கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் நேற்றுக் காலமானார்.

பொன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவர். அதுமட்டுமன்றி, வட இலங்கை சங்கீத சபையுடன் நெருங்கிய தொடர்புகொண்டு அரிய பணிபுரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-இ)

## விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

மீசாலை பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் காயமடைந்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞன், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கனகராயன்குளம் வவுனியா பகுதியைச் சேர்ந்த முகுந்தரூபன் துவாரகன் (வயது - 21) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர், கிளிநொச்சி பகுதியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்தார். இந்நிலையில், கடந்த 6ஆம் திகதி கிளிநொச்சி நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில், மீசாலை மில்லடி பகுதியில் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பட்டா ரக வாகனமும், மோதுண்டு விபத்து இடம் பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த25,26)

## ஊடகத்தில் கருத்துக்கள் கூறிய பெண்ணை விசாரிப்பது அநீதி!

*சுதந்திர ஊடக இயக்கம் கடும் கண்டனம்*

கொழும்பு, மார்ச் 18

சிங்கராஜ வனப்பகுதிக்கு அருகாமையில் இடம்பெறும் காடழிப்பு தொடர்பில் இறக்குவான பகுதியைச் சேர்ந்த பாக்யா அபேரத்ன எனும் இளவயதுப் பெண் தெரிவித்திருந்த கருத்துக்கு எதிராக செயற்படும் அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகள் எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இத்தகைய நடவடிக்கைகள் கருத்துரிமையை மறுக்கும் செயற்பாடுகள் என்றும் இதனைக் கண்டிக்கின்றோம் என்றும் சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

இது பற்றி அந்த இயக்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகிய நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பாக்யா அபேரத்ன, தமது கிராமத்தில் நடைபெற்றுவரும் காடழிப்பு குறித்து தனது கவலை, அதிருப்தியை தெரிவித்திருந்தார். எனினும், மறுநாள், குறித்த பெண் தெரிவித்த கருத்தில் எவ்விதமான உண்மைத்தன்மையும் இல்லை என்று வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து இறக்குவான பொலிஸார் இருவர், அந்த பெண்ணின் வீட்டுக்குச் சென்று அவருக்கு யார் அப்படியான கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கோரினார்கள் என்று வினவி, அது குறித்து விசாரித்துச் சென்றுள்ளனர்.

அந்தப் பெண் தெரிவித்த சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும், காடழிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, காடழிப்பு செயல்பாட்டை சுட்டிக்காட்டிய நபருக்கு எதிராக செயற்படுவது பொருத்தமல்ல.

அதேபோன்று அந்தப் பெண்ணுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும் என்று சமூக ஊடகங்களில் கருத்துக்கள் பகிரப்படுகின்றன. இந்தச் செயற்பாடுகள் சுதந்திரத்துக்கு தடை ஏற்படுத்துவன. கருத்து தெரிவிக்கும் நபரின் பாதுகாப்புக்கும் இது அச்சுறுத்தலாக அமைகின்றது. - என்றுள்ளது. (த-319)

# நீதிகோரி நல்லூரில் திரண்டது தமிழினம்






























# டக்ளஸ் - அங்கஜன் மோதல் தொடர்கிறது

கிளிநொச்சி, மார்ச் 18

**யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோருக்கு இடையிலான மோதல் தொடர்கின்றது.**

நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் மீது சில குற்றச்சாட்டுக் களை முன் வைத்திருந்தார். அதனை நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மறுத்திருந்தார்.

இந்த நிலையில் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து மீண்டும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது குற்றச்சாட்டுகளை, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் சுமத்தியுள்ளார். அவர் தனது உரையில், 2010ஆம் ஆண்டு அரசியல் அனுபவமற்றவனாய் நிராயுதபாணியாக யாழ்ப்பாணத்துக்கு வந்த நிலையில் நெருப்பாற்றை நான் கடக்கவில்லை. ஆனால் நெருப்பாற்றை கடந்தவர்களையே தேர்தல் அரசியலில் கடந்துதான் நான் வந்திருக்கிறேன்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் எனது இணைப்பாளர் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு இணைத் தலைவரால் முரண்பட்ட கருத்து ஒன்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் கருத்து தெரிவித்தவர் என்னை சந்திக்க எதிர்பார்க்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் நான் அவரைச் சந்தித்து கலந்துரையாட வேண்டும் என்று இரண்டு தடவைகள் தெரிவித்தேன். அவரும் விருப்பம் தெரிவித்தார். ஆனால் கலந்துரையாட இன்னமும் முன்வரவில்லை. என்னிடம் பிழை இருந்தால் அதனை திருத்திக் கொள்ள நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் தயாராக இருக்கிறேன். ஆனால் குறை கூறியோர் என்னிடம் பிரச்சினையை தெரிவிக்காமல் உலகம் முழுவதும் சொல்லித் திரிகிறார்கள். யாழ்ப்பாணம் - கிளிநொச்சி ஒரு தேர்தல் மாவட்டம் என்கின்ற நிலையில் அரசால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டங்களை யார் வேண்டுமானாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முடியும்.

கிளிநொச்சி அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் யாழ்ப்பாண சமுர்த்தி திணைக்கள த்திடம் சௌபாக்கிய வார நிகழ்வை நடத்துவதற்கு அனுமதி கோரியிருந்தார். அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் நாம் கிளிநொச்சியில் ஒரு நிகழ்வை நடாத்துவதற்கு கோரினோம். அனுமதி வழங்கப்படவில்லை. அரச அதிகாரிகளை அச்சுறுத்த வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. ஆனால் அரசால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டங்கள் உரிய முறையில் மக்களிடம் சென்றடைவதை அதிகாரிகள் ஊடாக உறுதிப்படுத்த வேண்டியது என் கடமை.

2010ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணத்தில் அரசியலில் ஈடுபட ஆரம்பித்த போது பல ஆயுதக் குழுக்களின் மத்தியிலேயே எனது அரசியலை ஆரம்பித்தேன். அன்றும் எவருக்கும் பயப்படாமல் அரசியலில் ஈடுபட்டமையால்தான் மக்கள் இன்றைக்கு எனக்கு தம் வாக்குகள் மூலம் முழுமையான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்கள். ஆகவே அரசின் திட்டங்களை அரசில் பங்காளிகளாக இருக்கின்றவர்கள் தமது மக்களை பிரதிநிதித்துவப்படுத்து கின்ற பிரதேசங்களில் எந்த விதமான தடைகளும் இன்றி நடைமுறைப்படுத்த முடியும் என்பதே எனது நிலைப்பாடு. இதனை மற்றவர்களும் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும், என்றார். (ஓ.5)



## சித்திரைப் புத்தாண்டில் பயணக் கட்டுப்பாடுகள்?

தேவைக்கேற்பவே என்கிறார் இராணுவத்தளபதி

கொழும்பு.மார்ச் 18

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில், தேவையேற்பட்டால் மட்டுமே பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். கடந்த நத்தார் பண்டிகையின் பின்னர் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாட்டில் துரிதமாக அதிகரித்தது. பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்காமையே அதற்குக் காரணம் என்று கண்டறியப்பட்டது. எனினும் எதிர்வரும் புத்தாண்டுக் காலத்தில் தொற்றாளர்கள் அதிகரிப்புக்கு வாய்ப்பு வழங்க முடியாது. கட்டுப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## மாகாண தேர்தல் முறைமை இன்னமும் தீர்மானமில்லை

**இராஜாங்க அமைச்சர் ரொஷான் தெரிவிப்பு**

கொழும்பு.மார்ச் 18

மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் பிரகாரம் நடத்துவது என்ற சிக்கல் காணப்படுகிறது. முரண்பாடுகளுக்கு மத்தியில் மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாது. எந்த முறைமையில் தேர்தலை நடத்துவது என்று உறுதியான தீர்மானம் இதுவரையில் எடுக்கப்படவில்லை. இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு கண்டு மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்த ஆளும் தரப்பின் கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களுடன் பேச்சு முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எந்தத்தரப்பினரது அழுத்தங்களுக்கும் அடிபணிந்து மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு தீர்மானிக்கவில்லை. நல்லாட்சி அரசு திட்டமிட்ட வகையில் மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டது. இதற்கு மக்கள் விடுதலை முன்னணியினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஆதரவு வழங்கினர். தற்போது அரசு மாகாண சபைத் தேர்தலைப் பிற்போடுவதாக குற்றஞ்சாட்டுகின்றனர். பழைய தேர்தல் முறையில் நடத்துவதா அல்லது புதிய தேர்தல் முறையில் அதாவது கலப்பு தேர்தல் முறைமை யில் நடத்துவதா என்பது குறித்து உறுதியான தீர்மானம் இதுவரையில் எடுக்கப்படவில்லை - என்றார். (க-இ)

ஏப்.21 தாக்குதல்

## இரகசிய ஆவணங்கள் சட்டமா அதிபரிடம்

கொழும்பு.மார்ச் 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை தவிர இரகசிய ஆவணங்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களும், நிபந்தனைகளின் அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளன என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு அரசு கவனத்தைச் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் காணப்படும் இரகசிய தகவல்கள் மற்றும் இதுவரையில் குற்ற விசாரணைப்பிரிவிடம் உள்ள சகல தகவல்களுடன் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் குற்ற விசாரணைப் பிரிவினால் எடுக்கப்படும். இவை அமைச்சரவை உப குழுவின் பொறுப்பல்ல. நாட்டில் இன மற்றும் மதச் செயற்பாடுகளின் போது நாட்டின் பாதுகாப்பு மற்றும் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்காக, மீண்டும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய மறுசீரமைப்புக்கள் தொடர்பான பரிந்துரைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதே அமைச்சரவை உப குழுவின் பொறுப்பாகும். இதற்கு இரண்டு வார கால அவகாசம் கோரப்பட்டுள்ளது - என்றார். (க-இ)

## அசாத் சாலியின் வாகனத்தில் வெளிநாட்டுத் துப்பாக்கிகள்

கொழும்பு.மார்ச் 18

அசாத் சாலி பயணித்த வாகனத்தில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தப்பட்ட தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அசாத் சாலி கைதுசெய்யப்படும் போது, பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால், அவர் பயணித்த வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன்போது இவை கண்டுபிடிக்கப்பட்டன. கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால், கொள்ளுப்பிட்டியில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## நாடு திரும்புவோருக்கான தனிமைப்படுத்தல் காலம் குறையலாம்!

கொழும்பு.மார்ச் 18

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவோரின் தனிமைப்படுத்தும் காலத்தை குறைப்பது தொடர்பில், அரசு கவனம் செலுத்தியுள்ளது.

அத்துடன் ஓரிரு வாரங்களுக்குள், பொதுமக்களுக்கு சுகாதார ஆலோசனைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதேவேளை வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்கள், இரண்டு கட்டங்களில் கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றிருப்பின், அவர்களை தனிமைப்படுத்த தேவையில்லை என்று சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் கலந்துரையாடி, தீர்மானம் அறிவிக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வருமுன் காப்போம்!

மன்னாரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ரயில் – பஸ் விபத்து ஒட்டுமொத்த இலங்கையையும் அதிர்ச்சிக்குள் தள்ளியது. பாரதூரமான உயிராபத்துக்கள் ஏற்பட்டு விடுமோ! என்று ஒருகணம் அனைவரும் பதறிப்போயினர். இந்த விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்ததோடு, 25 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களின் நிலை தொடர்பில் கனத்தன இதயங்கள்.

ஆனால் இந்த விபத்தின் பின்னர்தான் வடக்கின் இன்னொரு சீத்துவத்தனம் வெளியுலகுக்குத் தெரிந்தது. விபத்து ஏற்பட்டு சில நிமிடங்களில், குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக பொதுமக்கள் குருதி வழங்க முன்வர வேண்டும் என்றும் மன்னார் பொது மருத்துவமனை அறிவித்தது. இதையடுத்து பல நூறு பேர் குருதியைக் கொடையாக்கத் திரண்டனர். தேவையான அளவுக்குக் குருதி கிடைத்தது. ஒரு கட்டத்தின் பின்னர் குருதியைப் பெறுவதும் நிறுத்தப்பட்டது. 'வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டுவது' ஒன்றும் எமக்குப் புதிதல்ல. ஆனால் இதே மெத்தனப்போக்கை உயிர்காக்கும் விடயங்களிலும் கொண்டிருப்பது நிச்சயம் வேதனைக்கு உரியது. அது வெட்கப்பட வேண்டியதும்கூட.


குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்பது நேற்றைய தினம் திடுதிடுப்பென அறிவிக்கப்பட்ட ஒன்றல்ல. வடமாகாணத்தில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவமனைகள் ஏற்கனவே அறிவித்து குருதி வழங்க ஆர்வலர்கள் முன்வர வேண்டும் என்று கோரிக்கையும் விடுத்திருந்தன. இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்ட அடுத்த ஓரிரு நாள்களில் தன்னார்வலர்கள் மனமுவந்து குருதியைக் கொடையாக்கியிருந்தால் இந்தப் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்காது. வெறும் 25 பேருக்கு சிகிச்சை வழங்கக்கூட கையிருப்பில் குருதி இல்லை என்பது எத்தனை அபத்தமானது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

வெறுமனே குருதிக் கொடையாளர்களில் பாரத்தைப் போட்டுவிட்டும் இந்த விவகாரத்தில் நகர முடியாது. குருதி வங்கிகளும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய கட்டாயமுடையவை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நவம்பர் 27ஆம் திகதி போன்ற தமிழர்களின் உணர்வெழுச்சி நாள்களின்போது வடக்கில் உள்ள குருதி வங்கிகள் குருதியைப் பெறுவதற்குப் பின்னிற்கின்றமை அனைவரும் அறிந்ததே. அதிலும் குறிப்பாக கடந்த வருடம் நவம்பர் 27ஆம் திகதியன்று குருதியைக் கொடையாக்கச் சென்ற கொடையாளர்கள் பலர் திருப்பி அனுப்பப்பட்டனர். அதன் பின்னர்தான் வடக்கில் இவ்வாறான தட்டுப்பாட்டு நிலைமை தீவிரம் பெற்றுள்ளது. உணர்வெழுச்சியுடன் குருதியைக் கொடையாக்க வந்தவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டு, பின்னர் குருதிக்குத் தட்டுப்பாடு என்று புலம்புவதில் என்ன பயன் இருந்துவிட முடியும்?

இன்னும் சொல்லப்போனால், கடந்த நவம்பர் 27ஆம் திகதிக்குப் பின்னர், குருதி வங்கிகள் வெளிப்படுத்திய அரசியல் பிடிக்காமையால், தன்னார்வலர்கள் பலர் குருதியைக் கொடையாக்குவதை நிறுத்திக்கொண்டுள்ளனர் என்பதுதான் யதார்த்தம். எனவே, குருதி வங்கிகளும் அரசியல் அடிபணிவுகளுக்கு அப்பால் தற்துணிவுடன் செயற்பட முன்வர வேண்டும். இலங்கையில் வேறு எந்தப் பகுதிகளிலும் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது இயல்பானது. ஆனால் வடக்குக்கு இந்தத் தட்டுப்பாடு புதியது. இந்த அசாதாரண நிலை தோற்றம் பெற்றதில் குருதி வங்கிகளின் பேரின விசுவாசமும் காத்திரமான பங்கை வகிக்கின்றது என்ற உண்மை அவற்றுக்கு உறைக்கட்டும்.

குருதியைக் கொடையாக்குவது குருதி வங்கிகளுக்காக அல்ல. எமது உறவுகளுக்காக என்ற யதார்த்தத்தை கொடையாளர்களும் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு மருத்துவமனையில் குருதிக்குத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது என்றால், அது அந்த மருத்துவமனையைச் சுற்றியுள்ள அனைவருக்கும் பெரும் தலைகுனிவுதான். உயிர்க் கொடையான குருதிக்கொடைக்கு இனியும் பின்னிற்காமல், வெள்ளம் வருமுன்னே அணை கட்டுவோம்.



நன்றி சஜித் பண்டார

# காணி சுவீகரிப்பு முயற்சி கிளிநொச்சியில் முறியடிப்பு

கிளிநொச்சி, மார்ச் 18

பொலிஸாரின் பாவனையில் உள்ள மக்களது காணியை நிரந்தரமாகச் சுவீகரிக்க எடுக்கப்பட்ட முயற்சி மக்களின் எதிர்ப்பால் முறியடிக்கப்பட்டது.



கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் பகுதியில் ஏ-9 வீதியில் பெண்கள் சிறுவர் பிரிவு உள்ளிட்ட பொலிஸ்திணைக்களப் பிரிவுகள் பயன்படுத்திவரும் காணியை அரச காணி எனத் தெரிவித்து அளவீடு செய்ய நேற்று முயற்சி எடுக்கப்பட்டது. நில அளவையாளர்கள், நில அளவீட்டுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இந்த நிலையில் அப்பகுதிக்கு வந்த காணி உரிமையாளர்கள் என தம்மை அடையாளப்படுத்தியவர்கள் மற்றும், அரசியல்வாதிகள் அதில் தலையிட்டு அளவீட்டைத் தடுத்தனர்.

குறித்த காணி தனியார் காணி எனவும், அதன் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் உள்ளனர் எனவும், அவர்கள் வருகை தரும் வரை காணியை அளவீடு செய்யும் நடவடிக்கையை நிறுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் எழுத்து மூலமான கடிதமும், வருகை தந்த நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த காணி தொடர்பில் உரிமையாளர்கள் இருப்பின் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்கனவே கரைச்சி பிரதேச செயலகத்தால் அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-6)

# மக்கள் போராட்டத்தைத் தடுக்காது கோரிக்கையை நிறைவேற்றுங்கள்!

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து

வடக்கு, கிழக்கில் அறவழிப் போராட்டங்களை மக்கள் முன்னெடுத்துள்ளனர். அந்தப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. இவ்வாறு செய்வதை விட அந்த மக்களால் முன்வைக்கப்படும் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் நுவரெலியாவில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் சீனி இறக்குமதி மோசடியால், அரசுக்கு கோடிக்கணக்கில் வருமான இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மத்திய வங்கிக் கொள்ளையை விட, சீனிக்கொள்ளை மிகப்பெரிய மோசடியாகக் கருதப்படுகின்றது. மத்திய வங்கிக் கொள்ளைமூலம் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட கம்பனிகளின் வங்கி இருப்புகள் மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டன. எனவே, சீனிக் கொள்ளை தொடர்பில் உரிய விசாரணை நடத்தி, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, நாட்டில் இடம்பெறும் வன அழிப்பு, சுற்றாடல் அழிவு தொடர்பில் கடந்த காலங்களில் பிக்குமார் உரத்துக்குரல் எழுப்பினர். அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால், சிங்கராஜ வனப்பகுதியில் நடைபெறும் வன அழிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட பெண் ஒருவரை மிரட்டும் பணி ஆரம்பமாகியுள்ளது. இதனை நாம் கண்டிக்கின்றோம்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னும் ஆயிரம் ரூபா கிடைக்கவில்லை. இந்த நிலையில் சம்பள உயர்வைத் தடுக்கும் வகையில் கம்பனிகள் நீதிமன்றம் சென்றுள்ளன. எனவே, சம்பளம் கைக்குக் கிடைத்த பின்னரே அதனை வெற்றியாகக் கருதமுடியும் - என்றார். (க-44)

# சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக வட்டக்கச்சி மக்கள் போர்

**கிளிநொச்சி, மார்ச் 18**

**கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை கிளிநொச்சி நகரத்தில் மேற்கொண்டனர். வட்டக்கச்சி பிரதேசத்திலிருந்து உழவு இயந்திரங்களில் கிளிநொச்சி காக்காகடைச் சந்திக்கு வந்த மக்கள் அங்கிருந்து ஏ-9 வீதி ஊடாக மாவட்டச் செயலகத்துக்குச் சென்று மாவட்டச் செயலர் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளுக்கான கோரிக்கை மனுவையும் கையளித்தனர்.**



கடந்த 10 ஆம் திகதி வட்டக்கச்சி பிரதேசத்தில் இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் சமூக செயற்பாட்டாளர் ஒருவர் உயிரிழந்தார். அவருடைய இறப்பு கிராமத்தில் இடம்பெறுகின்ற கஞ்சா, கசிப்பு, சட்டவிரோத மணல் கடத்தல் ஆகியவற்றின் விளைவே என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான நிலையிலேயே நேற்று மக்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

"இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸார் உட்பட சம்மந்தப்பட்ட அனைத்துத் தரப்பினர்களுக்கும் இதயசுத்தியுடன் முன்வர வேண்டும். கொலைக்குரிய நீதியைப் பெற்றுத்தர வேண்டும், காலம் தாமதிக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதி. நிம்மதியான வாழ்வுக்கு வழி ஏற்படுத்து. எம் வாழ்வின் எதிர்காலம் என்ன? இலஞ்சம் அற்ற நாடு வசந்தம் பூக்கும் வீடு, நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோ கங்களை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்தோடு இந்தக் கொலைச் சம்பவத்தைக் கண்டித்தும், அதற்கு நீதி கோரியும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மீது தருமபுரம் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்தும் வட்டக்கச்சியில் உள்ள பொதுச் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களை நேற்று முழுமையாக மூடியும் மக்கள் தமது பூரண எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

(ப-214,6)

# அக்பரை விடுவிக்குக ஹரீஸ் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 18

முஸ்லிம் மக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான ஹஸ்ரத் ஹஜ்ஜுல் அக்பரைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. எனவே அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்பர் 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். மீண்டும் குற்றப்புலனாய்வு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனவே அரசு அவர் சார்ந்த விசாரணைகளை நியாயமான முறையில் உடன் விசாரித்து, அவரை விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (க-இ)

# அசாத் சாலி மீதான விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 18

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், அவரது வாகனத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைவாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் அசாத் சாலி நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்.

அசாத் சாலியின் சர்ச்சைக்குரிய கருத்து இனங்களுக்கு மத்தியில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் வகையில் அமையப் பெற்றவை என்று பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான ஐவர் அடங்கிய குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அசாத் சாலியின் கருத்துக்கு, பதில் கருத்தாக முகப்புத்தகம் உள்ளிட்ட இணையத்தளங்களிலும் பதிவேற்றப்பட்டுள்ள பதிவுகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. (க-இ)

# முஸ்லிம்கள் மீதான தடை அரசியல் இலாபத்துக்கானதே!

## மக்கள் காங்கிரஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 18

நாட்டை அபிவிருத்தியால் கட்டியெழுப்ப வேண்டிய அரசியல் தலைமைகள், முஸ்லிம் மக்கள் மீது தடைகளை ஏற்படுத்தி, வீண் பழியைச் சுமத்தி, அரசியல் இலாபத்தைக் காண முயற்சிக்கின்றனர். முஸ்லிம்களால் நாட்டுக்கு அச்சுறுத்தல் என்பது ஒரு கற்பனை நாடகமே.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளர் எம். மஹ்தி தெரிவித்தார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முஸ்லிம்களைப் பயங்கரவாதிகள் என்றும், அடிப்படைவாதிகள் என்றும், அவர்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றும் சில கடும் போக்காளர் களும், சில அரசியல் வாதிகளும் கற்பனை கதைகளைக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம்பெண்கள்அணியும் புர்கா ஆடையைத் தடைசெய்தல், மதரஸாக்களைத் தடை செய்தல் போன்ற விடயங்களைப் பூதாகரமாக்கி, நாட்டின் பெரும்பான்மை மக்களிடமிருந்து முஸ்லிம்களைத் தூரமாக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

சஹ்ரான் என்ற தற்கொலையாளி யாரோ ஒருவருக்கு தரகராக நின்று நடத்திய தாக்குதலை முஸ்லிம் சமூகத்தின் மீது போடுகின்றனர்.

குருநாகலில் மருத்துவர் ஷாபி மீதான குற்றச்சாட்டு, கருத்தடை மாத்திரை கலந்த கொத்து ரொட்டி, கண்டி திகன கலவரம் போன்ற நிகழ்வுகளில் கூட முஸ்லிம்கள் நியாயமின்றிக் குற்றம் சுமத்தப்பட்டனர். இவை அனைத்தும் திட்டமிட்டு முஸ்லிம்கள் மீது ஏற்படுத்தப்பட்ட கசப்பான, வேதனையான சம்பவங்களாகும் - என்றுள்ளது. (க-இ)

மன்னார் விபத்து;

# சந்தேகநபர்கள் இருவருக்கும் 22 திகதி வரை விளக்கமறியல்

மன்னாரில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் கைதான பஸ் சாரதி மற்றும் ரயில்வே கடவை பாதுகாவலர் ஆகியோரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

மன்னாரில் நேற்றுமுன்தினம் தனியார் பயணிகள் பஸ் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 25 பேர் காயமடைந்தனர். குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் கைதான பஸ் சாரதி மற்றும் கடவை பாதுகாவலர் ஆகிய இருவருக்கு எதிரான வழக்கு நேற்று மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ-60)

# ஒடுக்குமுறைகளைத் தொடரும் அரசு ஜெனிவாவில் வெல்வது சாத்தியமா?

## ரிஷாத் எம்.பி. கேள்விக்கணை



கொழும்பு, மார்ச் 18

அரசு தங்களுக்குப் பிடிக்காத ஒரு சில அரசியல்வாதிகளைப் பழிதீர்ப்பதற்காக, ஒட்டுமொத்த முஸ்லிம்களின் கலாசார நம்பிக்கையைக் கொச்சைப்படுத்துகின்றது. சமூகங்கள் மீதான ஒடுக்கு முறைகளைத் தொடர்ந்து கொண்டு ஜெனிவாவில் எவ்வாறு வெல்ல முடியும்?

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

இலங்கையில் புர்காவைத் தடை செய்வது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"முஸ்லிம்களை இலக்கு வைக்கும் இவ்வாறான நிகழ்ச்சி நிரல்களை, அரசு கைவிடுவதாகத் தெரியவில்லை. ஆட்சிக்கு வர உதவிய இனவாதிகளைத் திருப்திப்படுத்தவே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அத்தோடு கொரோனா சூழ்நிலையில் முகக்கவசம், மூக்கை மறைத்தல் என்பவை கடைப்பிடிக்கப்படும் காலமிது.

அரபு நாடுகளின் நண்பன் எனக் கூறும் இந்த அரசு, அரபு நாடுகளிலும் முஸ்லிம் உலகிலும் விரும்பப்படும் ஆடைகளுக்கு அடிப்படைவாதச் சாயம் பூசுவது விந்தையாகவும், வேடிக்கையாகவும் உள்ளது.

அரச தரப்பினர் தங்களுக்குப் பிடிக்காத ஒருசில அரசியல்வாதிகளைப் பழிதீர்ப்பதற்காக, ஒட்டுமொத்த முஸ்லிம்களின் கலாசார நம்பிக்கையைக் கொச்சைப்படுத்துவதா? சமூகங்கள் மீதான ஒடுக்கு முறைகளைத் தொடர்ந்து கொண்டு ஜெனிவாவில் எவ்வாறு வெல்ல முடியும்? இலங்கையில் புர்கா தடை வருமாக இருந்தால், முஸ்லிம் நாடுகளிலிருந்து மட்டுமல்ல, முகத்தை மறைக்கும் எந்தவொரு முஸ்லிம் பெண்ணும், சுற்றுலாப் பயணியாக இலங்கைக்கு வரப்போவதில்லை. எமது நாட்டின் சுற்றுலாத்துறையில் இது பாதிப்பை ஏற்படுத்தி, அந்நியச் செலாவணியில் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதை அரசு புரிந்து கொள்ளல் அவசியம்" - என்றார். (க-22)

# மக்கள் மத்தியில் சட்ட அறிவு குறைவு

## நீதியமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு,மார்ச் 18

**சட்டம் தொடர்பில் பொதுமக்களின் அறிவு மிகவும் குறைவான மட்டத்தில் உள்ளது. எனவே சட்டம் தொடர்பான அடிப்படைப் புரிதலை பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் நடந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் இந்த ஆலோசனையை முன்வைத்தார்.

முன்னேற்றமடைந்த நாடுகளில் அடிப்படைச் சட்டம் தொடர்பில் குடியியல் கல்வி கற்பிக்கப்படுகிறது. அதனால் இலங்கையிலும் பாடசாலைப் பாடத்திட்டத்தில் சட்ட அறிவை இணைப்பது இன்றைய அவசர தேவைப்பாடாகும்.

அதற்காக பாடசாலை பாடத்திட்டத்தில் சட்டத்தை ஒரு பாடமாகக் கொண்டு வருவது தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது. நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய சட்டத்தை, பாடத்திட்டத்தில் விரைவில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

# பாடசாலை பாடமாக இலங்கைச் சட்டம்

## தமிழ் எம்.பிக்களுடன் குழு நியமனம்

கொழும்பு,மார்ச் 18

தேசிய பாடசாலைப் பாடத்திட்டத்தில் இலங்கையின் சட்டத்தையும், ஒரு பாடமாக உள்ளடக்குவதற்குப் பொருத்தமான பொறிமுறை தயாரிக்கப்படவுள்ளது.

அதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு தனது யோசனைகள் அடங்கிய அறிக்கையை ஒரு மாதத்துக்குள் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், சிவஞானம் சிறிதரன், வீரசுமன வீரசிங்ஹ, சாகர காரியவசம், அமரகீரித்தி அத்துகோரல, டயனா கமகே, சுதர்ஷன தெனிப்பிட்டிய உள்ளிட்ட எட்டுப்பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# வெளிநாட்டுப் பணியாளர்களை நாட்டுக்கு அழைப்பதில் மோசடி

## கொழும்பில் நாளை ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மார்ச் 18

வெளிநாட்டுப் பணியாளர்களை நாட்டுக்கு அழைத்து வரும் போது இடம்பெறும் மோசடிகளை உடன் நிறுத்துமாறு கோரி, நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் உள்ள ஆர்ப்பாட்ட இடத்தில், உரிய சுகாதார விதிமுறைகளுக்கமைவாக, நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

இதற்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் ஹப்புஹாமி அழைப்பு விடுத்துள்ளார். "நாட்டுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுக்கும் வெளிநாட்டில் உள்ள இலங்கைப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள தருணத்தில், அவர்கள் நலன் தொடர்பில் அக்கறை கொள்ளாமல் இருக்க முடியாது. கொவிட்-19 வைரஸ் பரவலுக்கு மத்தியில் பாதிப்படைந்துள்ள பணியாளர்களை அழைத்து வருவதற்கு விரைவான எவ்வித நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவில்லை. இதனைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்." என்று அவர் தெரிவித்தார். (க-இ)

# வாசனைத்திரவியங்கள் கடத்தல் முறியடிப்பு

சீனாவிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 40 அடி நீளமுள்ள கொள்கலனில் இருந்து, சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான வாசனைத் திரவியங்கள் சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

தொழிற்சாலை ஒன்றின் உற்பத்திக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படும் காகித இறக்குமதி என்ற போர்வையில் இவை நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

குறித்த கொள்கலனை ஆய்வு செய்த, சுங்க அதிகாரிகள் பல்வேறு ஷாம்புகள், கண்டிஷனர்கள் மற்றும் முடி சாயங்கள் அடங்கிய சுமார் 3 மெற்றின் தொன் எடையுள்ள வாசனைத் திரவியங்களைக் கைப்பற்றினர்.

இவற்றை சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டு வந்த தொழிற்சாலையின் அதிகாரிகள் மற்றும் கொழும்பு துறைமுகத்திலிருந்து அவற்றை அகற்ற முயன்ற நபர்கள் சுங்கத் திணைக்களத்துக்கு விசாரணைக்கு வரவழைக்கப்பட்டனர். அவர்களிடம் அறிக்கை பெறப்பட்டது. மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (க-இ)



# கலைஞர்களுக்கு 'ப்ரேக்ச' காப்புறுதி

கொழும்பு,மார்ச் 18

நாடகக் கலைஞர்களுக்கு, 'ப்ரேக்ச' காப்புறுதி வழங்கும் திட்டம், பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

தேசிய மரபுரிமை அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் டவர் மண்டப அரங்க அறக்கட்டளை ஆகியவை இணைந்த வகையில், ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தால் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் இலங்கை கலை மன்றத்தால் வெளியிடப்பட்ட 'கலை இதழ்' மற்றும் 'புத்தர் சிலை நிர்மாணக் கலை' ஆகிய நூல்களின் முதல் பிரதிகள் இலங்கை கலை மன்றத் தலைவர் பேராசிரியர் ஜெயசேன கோட்டேகொடவால், பிரதமருக்கு வழங்கப்பட்டன.

"கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக அனைத்துக் கலைத்துறை சார்ந்த கலைஞர்களும் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களது வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதற்கு சலுகை வட்டி வீதத்தில் 5 லட்சம் ரூபா கடன் பெற்றுக் கொடுக்கப்படும். 500 நாடகக் கலைஞர்களுக்கு இந்த காப்புறுதித் திட்டத்தை அரசு முழுச் செலவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது இலங்கை வரலாற்றில் முதல் முறையாகும்." என்று நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் தெரிவித்தார். (க-இ)

# நீதியரசர்கள் மீதான வழக்கின் குற்றப்பத்திரிகையில் குழப்பம்

கொழும்பு,மார்ச் 18

முன்னாள் சட்டமா அதிபரும், பிரதம நீதியரசருமான மொஹான் பீரிஸ், தற்போதைய நீதியரசர் திலீப் நவாஸ் உள்ளிட்ட மூவருக்கு எதிராக, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில், தொடரப்பட்டுள்ள வழக்கின் குற்றப்பத்திரிகை, மீளப் பெறப்படவுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது குறித்த குற்றப்பத்திரிகையில் தொழில்நுட்ப ரீதியிலான குழப்பங்கள் காணப்படுவதால், அதனை மீளப்பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டது.

லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு சார்பில் முன்னிலையாகிய, உதவிப் பணிப்பாளர் நாயகம் சுஹாஷினி சேனாநாயக்க இதனை நீதிவானுக்கு அறிவித்தார்.

2010 ஆம் ஆண்டு இலங்கை மின்சார தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர்கள், சிலமுன்னணி ஊழியர்களுக்கு எதிராக ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

இது தொடர்பான வழக்கில் லஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் துஷ்பிரயோகம் எனும் குற்றத்தைப் புரிந்துள்ளனர் என்று மூவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டது.

லஞ்ச ஊழல் சட்டத்தின் பிரகாரம் நீதியரசர் ஏ.எச்.எம். நவாஸ், முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் ஆகியோருக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக் குழுவினரால், கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் உள்ள வழக்கை விசாரணைக்கு எடுப்பதைத் தடுக்கக் கோரி இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பிக்க, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி உதய ரொஹான் டி சில்வா உள்ளிட்ட 4 தரப்பினர் உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

மனுக்களை ஆராய்ந்த உயர் நீதிமன்றம், சம்பவம் தொடர்பில் நீதிவான் நீதிமன்றில் முறைப்பாட்டை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதைத் தடுத்து இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்தது.

உயர் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டிருந்த தடையுத்தரவு, உயர் நீதிமன்றால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று லஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில் முன்னிலையாகிய அதிகாரிகள் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், உயர் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவு இதுவரை நீதவான் நீதிமன்றுக்குக் கிடைக்காத நிலையில், வழக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொழும்பு பிரதான நீதிவான் புத்திக ஸ்ரீ ராகல உத்தரவிட்டார். (க-இ)

# வடக்கு–கிழக்கு நட்புறவுக் கிண்ணம் யாழ்ப்பாணத்தில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

வடக்கு - கிழக்கு நட்புறவுக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் தொடர் யாழ்ப்பாணத்தில் நாளையும் நாளைமறுதினமும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கிரிக்கெட் கழகமும், மோட் விளையாட்டுக் கழகமும் இந்த ஆட்டத்தில் மோதுகின்றன. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஒருநாள், ரி20 என இரண்டு ஆட்டங்களும் இடம்பெறவுள்ளன. குறித்த ஒருநாள் ஆட்டம் நாளை காலை 9 மணிக்கும் ரி20 ஆட்டம் நாளைமறுதினம் நண் பகல் 1.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (ம)

### கால்நடைகளின்

# வாழ்விடமாக மாறியது முல்லை.பஸ் நிலையம்

### பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு



**முல்லைத்தீவு, மார்ச் 18**

**முல்லைத்தீவு புதிய பஸ் நிலையம் கால்நடைகளின் வாழ்விடமாக மாறியுள்ளது என மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொது அமைப்புக்களால் நேற்று முன்தினம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

பெருமளவான நிதியில் பொருத்தமான வசதிகளுடன் அமைக்கப்பட்ட இந்தப் புதிய பஸ் நிலையம் தற்போது கால்நடைகளின் வாழ்விடமாக மாறியுள்ளது.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட தற்காலிக பஸ் தரிப்பிடத்தில் இருந்தே உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கான பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. இதனால் இந்தப் புதிய பஸ் நிலையக் கட்டடம் கால் நடைகளின் உறைவிடமாக மாறியுள்ளது.

பொருத்தமான இடத்தில் பஸ் நிலையம் அமையவில்லை என்ற குற்றச்சாட்டுகள் கடந்த பல ஆண்டுகளாக பொது அமைப்புக்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஒரு நகரத்தின் முக்கிய கட்டடம் கால் நடைகளுக்கான உறைவிடமாக மாறி உள்ளதை அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை எனவும் குறித்த பஸ் நிலையக் கட்டடத்தை பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (ற-13)

## புதிய பாலத்துக்கு அடிக்கல் நடுகை

கிளிநொச்சி, மார்ச் 18

கிளிநொச்சி - இரத்தினபுரம் பகுதியில் 15 மில்லியன் ரூபா செலவில் புதிய பாலத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாடுமுழுவதும் 5 ஆயிரம் பாலங்கள் அமைக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இந்தப் பாலம் அமைக்கப்படவுள்ளது.

இரத்தினபுரம் மற்றும் ஆனந்தபுரம் பகுதிகளை இணைக்கும் பாலமாகவும், இரத்தினபுரம் மக்களின் இலகு போக்குவரத்து மற்றும் நகர தேவைகளைப் பூர்த்திசெய்யும் பாலமாகவும் குறித்த பாலம் அமையவுள்ளது.

குறித்த பகுதியில் சிறிய அளவான நடை பாதை கொண்ட பாலம் பிரதேச மக்களால் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த பகுதியில் பொருத்தமான பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு மக்கள் பல்வேறு தரப்பிடமும் கோரிக்கை முன்வைத்திருந்தனர். இதனையடுத்து 15 மில்லியன் நிதிச் செலவில் குறித்த பகுதியில் புதிய பாலம் அமைக்கப்படவுள்ளது. (ஐ-6)

### மலக் கழிவுகளை

## கிரவல் குழிகளில் கொட்ட முடியாது!

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

முல்லைத்தீவு, மார்ச் 18

முல்லைத்தீவு துணுக்காய்ப் பகுதியில் கிரவல் அகழப்பட்ட குழிகளில் மலக் கழிவுகளைக் கொட்ட முடியாது என நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

துணுக்காய்ப் பிரதேசத்தில் கிரவல் மண் அகழ்வு இடம்பெற்ற குழிகளில் மலக் கழிவுகளை கொட்ட முடியுமா என துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் அ.அமிர்தலிங்கம் கேள்வி எழுப்பியபோது மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும், குழிகள் காணப்படுகின்றன என்பதற்காக மலக் கழிவுகளைக் கொட்ட முடியாது. கழிவுகளை கொட்டுவதற்கான பொருத்தமான இடங்களைப் பிரதேச சபை மற்றும் சுகாதாரப் பகுதியினர் இணைந்து இனங்காண வேண்டும். துணுக்காய் பிரதேச சபையினர் தற்போது மலக் கழிவுகளை கல்விளான் பகுதியில் கொட்டி வருகின்றனர். அந்த இடம் பாதுகாப்பற்ற சூழலாகக் காணப்படுகின்றது எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்கு அருகில் விளையாட்டு மைதானம் மற்றும் குடியிருப்புக்கள் இருப்பதன் காரணமாக, இந்த இடத்துக்கான பொருத்தமான காணியை வழங்குமாறு துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-13)



மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் மற்றும் கிராம அபிவிருத்தி திணைக்களம் இணைந்து நடத்திய மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் மனைப் பொருளியல் கண்காட்சி நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ய-9)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 58 குளங்கள் புனரமைப்பு

முல்லைத்தீவு, மார்ச் 18

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 58 குளங்கள் செழுமை பசுமைத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

வடமாகாண ஆளுநர் ஜி.எம்.சாள்ஸ் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் காதர் மஸ்தான் ஆகியோரின் இணைத் தலைமைகளில் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் 16ஆம் திகதி நடைபெற்றது.

இதில் தொடக்கவுரை ஆற்றுகையிலேயே முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் இங்குள்ள 58 குளங்களும் செழுமை பசுமைத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட உள்ளன எனவும் தெரிவித்தார். (ச-13)



## இரு விபத்துக்களில் மூன்று பேர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 18

வெவ்வேறு விபத்துக்களில் சிக்கி காயமடைந்த மூவர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துக்கள் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றன.

நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த 28 மற்றும் 22 வயதுடைய இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். நள்ளிரவுவேளை மற்றொரு விபத்தில் சிக்கிய ஆவரங்கால் மேற்கைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவர், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-9)



## பேருந்து தரிப்பிட நிழல் குடை திறப்பு

வவுனியா, மார்ச் 18

இலுப்பைக்குளம் கிராம மக்களின் பயன்பாட்டுக்கென தமிழ் விருட்சம் அமைப்பினால் அமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிட நிழல் குடை மக்கள் பயன்பாட்டுக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற அ.ஞானேந்திரனின் நினைவு தினத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ய)

## முகக்கவசம் அணிவதால் சுவாச நோய் குறைவடைவு!



கொழும்பு, மார்ச் 18

முகக்கவசம் அணிவதால் சுவாசம் சார்ந்த நோய்கள் அதிகளவில் குறை வடைந்துள்ளன என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

ஜா-எல ஓபாத்த பிரதேசத்தில் முகக்கவச உற்பத்தி நிலையம் ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்வின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்த உற்பத்தி நிலையத்தில் என்95 மற்றும் சத்திரசிகிச்சை முகக்கவசங்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. இலங்கைக்குத் தேவையான முகக்கவசங்களை இங்கு உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புள்ளதுடன், மேலதிக உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-இ)

## மாவட்டச் செயலகத்தின் மகளிர் தின நிகழ்வு

வவுனியா.மார்ச் 18

வவுனியா மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் 'நாடும் தேசமும் உலகமும் அவளே' எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் கலந்துகொண்டார். நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பெண்கள் தொடர்பான ஆவணக் காணொலி ஒன்றும் இதன்போது வெளியிடப்பட்டது. மேலும் நிகழ்வில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ரூபினி வரதலிங்கம், மேலதிக மாவட்டச் செயலர்களான தி.திரேஸ்குமார், சுலோசனா(காணி), கணக்காளர் பாலகுமார்,பிரதேச செயலாளர்களான நா.கமலதாசன், இ.பிரதாபன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஜ-110)



அருள்மிகு வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் முதலாம் பங்குனி திங்கள் உற்சவ நிகழ்வு கடந்த 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. (ச-159)

## துப்புரவுப் பணி





கொடிகாமம், மார்ச் 18

பளை இந்து ஆரம்ப பாடசாலையில் கடந்த திங்கட்கிழமை துப்புரவுப் பணிகள் அதிபர் க.ஞானசீலன் தலைமையில் இடம்பெற்றன.

இதில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ச-159)

# பயங்கரவாத தடுப்பு சட்டத்தை இலங்கை மீளப்பெற வேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

**கொழும்பு,மார்ச் 18**

**இன, மத ஒற்றுமையை சீர்குலைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களை 2 வருடங்கள் தடுப்புக்காவலில் வைக்க அனுமதிக்கும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இலங்கை அரசு மீளப் பெற வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த மாதம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட முக்கிய மாற்றங்கள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை கடுமையாக விரிவுபடுத்துகின்றன.

இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கான கண்காணிப்பை வலுப்படுத்தவும், பொறுப்புக்கூறலை உறுதிசெய்யவும் மனித உரிமைகள் பேரவை பரிசீலித்து வருகின்ற நிலையில், இந்தக் கட்டுப்பாடு அடிப்படை உரிமைகளை மீறி சிறுபான்மை யினரை எளிதில் குறிவைக்க அனுமதிக்கும். இதே வேளை புர்கா தடை மற்றும் இஸ்லாமியப் பாடசாலைகளை மூடத் திட்டமிட்டுள்ளமை மத சுதந்திரத்துக்கான உரிமைகளைக் கடுமையாக மீறும் செயற்பாடாகும்.

குறிப்பாக முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களைக் குறிவைக்க ராஜபக்ச அரசு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் பிற சட்டங்களை பயன்படுத்தியுள்ளது. அதேநேரத்தில்சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறை மற்றும் பாகுபாட்டை வெளிப்படுத்துபவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என்றுள்ளது. (க-இ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

பளை, மார்ச் 18

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் முகமாலை தெற்கு இந்திராபுரம் வள்ளுவர் சன சமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த 10ஆம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக சு.திருநாவுக்கரசு, செயலாளராக சி.கிருபாஸ்கரன், பொருளாளராக க.கஜகுகன், உபசெயலாளராக ச.சினோமி எஸ்தர் மற்றும் சி.சிவப்பிரகாசம், த.சசிகலா, ச.அந்தோனியம்மா, சி.இராசத்தினம்,க.கஜமுகன் க.இலட்சுமிகாந்தன் ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (ச)

## ராணுவத்தை வெளியேற்றுமாறு தொழில் அலுவலகம் பரிந்துரை

கொழும்பு,மார்ச் 18

ராகலை மாகுடுகலை தோட்டத்தில், சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை, உடனடியாக அங்கிருந்து வெளியேற்றுமாறு, நுவரெலியா மாவட்ட தொழில் அலுவலகம், தோட்ட நிர்வாகத்துக்குப் பரிந்துரைத்துள்ளது.

இந்த அறிவிப்பின் பிரதிகள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும், மலையக மக்கள் முன்னணிக்கும் அனுப்பப்பட்டன. இது தொடர்பில் இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்ததாவது,

இராணுவத்திலிருந்து சட்டரீதியாக வெளியேறியவர்கள், தாங்கள் விரும்பிய தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமை உள்ளது. நாட்டின் சாதாரண சட்டத்துக்கு அமைய, அவர்கள் தொழில் ஒன்றில் ஈடுபட முடியும் என்றார்.

எனினும், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை ஈடுபடுத்தி, தொழிலாளர்களை அச்சுறுத்தி தொழிலை மேற்கொள்வதற்கு முயற்சிக்கின்றனர் என்று தொழிலாளர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இராணுவத்தினரை தோட்டத்தில் சேவையில் ஈடுபடுத்தியமையைக் கண்டித்து மாகுடுகல தோட்ட மக்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (க-இ)



## வர்த்தக நிலையத்தில் தீ விபத்து; பெறுமதியான பொருள்கள் நாசம்

வவுனியா,மார்ச் 18

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்று தீப்பற்றியதில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன. இந்தத் தீ விபத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த வர்த்தக நிலையத்தில் இருந்து புகை வருவதை அவதானித்த பிரதேச மக்கள், பல மணிநேரப் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இருப்பினும் குறித்த வியாபார நிலையத்துக்குள் இருந்த 10 லட்சத்துக்கு அதிகமான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

தீ விபத்து தொடர்பான விசாரணைகளை செட்டிக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-18)

## நெஞ்சுவலியால் குடும்பப் பெண் சாவு

சாவகச்சேரி, மார்ச் 18

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் (வயது-45) நெஞ்சுவலி காரணமாக நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச- 9)

## தண்ணீர் இறைக்கும் மோட்டர் திருட்டு

கொடிகாமம், மார்ச் 18

மந்துவில் கிழக்கு தெருவோரப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் மோட்டர் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளது என கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச- 159)

## இன்றைய நாள்



**மேடம்:** பணியிடத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். பாராட்டு தேடி வரும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். நீண்ட கால பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.

**இடபம்:** பிரியமானவர்களுக்காக விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். வயதானவர்களால் ஏற்பட்ட மருத்துவச் செலவு குறையும். காதலர்களுக்கு உதவி கிடைக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் தொடங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. தொழிலை விரிவுபடுத்துவதற்கு முயற்சி செய்வீர்கள். பணியிடத்தில் கலவையான நிகழ்வுகள் நடக்கும்.

**கடகம்:** கவனமாக செயல்படுங்கள். அடுத்த கட்டத்துக்கு நகர்வீர்கள். மரியாதை குறைவு ஏற்பட்டதாக கற்பனை செய்ய வேண்டாம். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்

**சிம்மம்:** உற்சாகம் அதிகரிக்கும். வெளி மனிதர்களுக்கு முன் கம்பீரம் கூடும். இத்தனை நாளாக இருந்து வந்த தொல்லை குறைய ஆரம்பிக்கும். நல்ல முடிவெடுப்பீர்கள்.

**கன்னி:** பெண்களுக்கு அனுகூலமான போக்கு நிலவிவரும். மற்றவர் மனம் நோகப் பேசினால் விளைவு கடுமையாக இருக்கும். மனதுக்குப் பிடித்தவர்களின் அனுசரணை அதிகரிக்கும்.

**துலாம்:** குடும்பத்தில் நீங்கள் எவ்வளவு முக்கியம் என்று உணர்வீர்கள். பிள்ளைகளின் சாதனை மகிழ்ச்சி அளிக்கும். கனவு நனவாகும். ஆரோக்கியம் சம்பந்தமான தொல்லைகள் அகலும்.

**விருச்சிகம்:** கருத்து வேறுபாட்டால் பிரிந்தவர்கள் வந்து இணைவர். முக்கிய முடிவெடுப்பதில் பிள்ளைகளை ஈடுபடுத்துவீர்கள். நன்றி பாராட்டுவீர்கள். உறவுகளைப் பேணி மகிழ்ச்சி அடைவீர்கள்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சிறு வருத்தங்கள் மறையும். வாகனத்திற்கு வங்கிக்கடன் கிடைக்கும். பேச்சில் கவனம் தேவை. அன்றாடப் பணிகளில் வெற்றி ஏற்பட்டு திருப்தி கிடைக்கும்.

**மகரம்:** சுபச்செலவுகள் கூடும். பிறரிடம் அன்புடன் பழகுவீர்கள். நண்பர்களுடன் மனக்கசப்பு ஏற்படும். வாகனம் வாங்கலாம். பயம் வேண்டாம். முயற்சியில் இருந்த தடைகள் தீரும்.

**கும்பம்:** வேற்று இனத்தவரால் நன்மையும் லாபமும் வரும். உங்களின் புத்திசாலித்தனம் பளிச்சிடும். பலர் பாராட்டுவார்கள். பெண்களால் நலம் உண்டாகும். எதிர்பாராத நன்மை வரும்..

**மீனம்:** பங்குதாரருடன் கணக்குகளை சரிபார்த்துக் கொள்வது நல்லது. நம்ப முடியாத சம்பவங்கள் நடைபெறும். மதிப்பு பெறுவீர்கள். வேற்று மொழி பேசுபவர்களால் நன்மை ஒன்று உண்டாகும்.

# சு.க. தனி வழி சென்றாலும் தேர்தலில் நாம் வெல்வோம்

## பெரமுன திட்டவட்டம்



**கொழும்பு,மார்ச் 18**

**மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சியினர் தனித்துப் போட்டியிட்டால், பொதுஜன பெரமுனவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. மாகாண சபைத் தேர்தலிலும் பொதுஜன பெரமுனவே அமோக வெற்றி பெறும்.**

இவ்வாறு சிறு பயிர்ச் செய்கை அபிவிருத்தி அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் சானக வகும்பர தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சிறிலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் சுதந்திரக் கட்சியினருக்கு அநீதி இழைக்கபடவில்லை மாறாக பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கே அநீதி இழைக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசில் அமைச்சுப் பதவிகளை வகித்த சுதந்திரக் கட்சியினருக்கு அமைச்சுப் பதவிகளும், இராஜாங்க அமைச்சுப் பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே சுதந்திரக் கட்சியினர் விசுவாசமாகச் செயற்பட வேண்டும். இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவோம் என்று சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களின் ஒரு சிலர் தெரிவிக்கின்றனர். எம்மாலும் தனித்துப் போட்டியிட்டு மக்களாணையைப் பெற முடியும் என்பதை 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளுராட்சி மன்றத் தேர்தலின் ஊடாக நிரூபித்துள்ளோம்- என்றார். (க-இ)

# முப்படையினரை நினைவுகூரும் தூபியில் புதையல் பொருள்கள்

## 28ஆம் திகதி நிகழ்வு

கொழும்பு, மார்ச் 18

முப்பது வருட கால சிவில் போரில் நாட்டுக்காக போராடி உயிர் நீத்த முப்படையினரை நினைவுகூரும் வகையில் அநுராதபுர புனித பூமியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சந்த ஹிரு சேய தூபியில் புதையல் பொருள்கள் வைக்கும் மத சம்பிரதாய நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

புதையல் பொருள்களை வழங்க எதிர்பார்த்துள்ளவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிகளுக்குள் அவற்றை அநுராதபுர நகரில் உள்ள சந்த ஹிரு சேய வளாகத்தில் கையளிக்க முடியும் என்று பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டுக்காக உயிர் நீத்த முப்படையினரை நினைவு கூரும் வகையில் வழிபாட்டுத் தூபி அமைக்கும் பணிகளை முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆரம்பித்தார். 29 ஆயிரம் படைவீரர்கள் போரில் கொல்லப்பட்டார்கள். 14 ஆயிரம் பேர் விசேட தேவையுடையவர்களாக்கப்பட்டார்கள். போரால் பாதிக்கப்பட்ட முப்படையினரை நினைவு கூருவது அரசின் பொறுப்பாகும்.

அநுராதபுரம் புனித பூமியில் மகாமேவ்னா பூங்காவில் ஜய ஸ்ரீ மகா போதி அமைந்துள்ள இடத்துக்கு அருகில் சந்த ஹிரு சேய தூபி உயிர் நீத்த முப்படையினரை நினைவுகூரும் வகையில் நிர்மாணிக்கப்படுகிறது. இதனடிப்படையில் இதுவரை 136 அடி உயரம் வரை நிர்மாணப்பணிகள் நிறைவடைந்து நாற்சதுர நிர்மாணப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன- என்றார். (ப)



வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தின் 'பசுமைப்புரட்சி' செயல்திட்டத்தின் கீழ், சாவகச்சேரி மீசாலை சுடரொளி முன்பள்ளி மழலைகளுக்கும் மறவன்புலவு சகலகலாவல்லி பாடசாலை மாணவர்களுக்கும் பயன் தரும் மரக்கன்றுகள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. (ய-159)

# ரஞ்சனின் 'ரிட்' மனுவை நிராகரிக்க ஆட்சேபனை

கொழும்பு,மார்ச் 18

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்துள்ள ரிட் மனுவை, விசாரணைக்கு ஏற்காது நிராகரிக்க வேண்டும் என்று சட்ட மா அதிபர் சார்பில் அடிப்படை ஆட்சேபனை முன்வைக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் நீதிபதி மாயதுன்ன கொரயா ஆகியோர் முன்னிலையில், ரஞ்சன் ராமநாயக்கவால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நேற்றுமுன்தினம் மீள பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையாகிய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இந்திக தேமுனி டி சில்வா, இந்த அடிப்படை ஆட்சேபனையை முன்வைத்தார்.

சட்டத்துக்குப் புறம்பான விதிகளைக் கொண்டு இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை விசாரணைக்கு ஏற்காது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அவர் ஆட்சேபனைகளை முன்வைத்தார்.

இதனையடுத்து ரஞ்சன் ராமநாயக்க சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி, எனது சேவை பெறுநர் குற்றவாளி யாகக் காணப்பட்டு தண்டனை அறிவிக்கப்பட்ட உடனேயே, அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தகுதியற்றவராக ஆக மாட்டார் என்று வாதிட்டார். மனு மீதான மேலதிக வாதப் பிரதிவாதங்கள் இன்று வரை ஒத்திவைக்கப்பட்டன. ரஞ்சன் ராமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பான தடை உத்தரவும் இன்று வரை நீடிக்கப்படும் என்றும் நீதிமன்றால் அறிவிக்கப்பட்டது. (க-இ)

# உயர்தர மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதியம்

கொழும்பு,மார்ச் 18

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெறும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு, உயர்தர கல்வியைத் தொடர்வதற்கான "ப்ரக்ஞாபந்து" புலமைப்பரிசில் நிதியம் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் எண்ணக்கருவுக்கு அமைவாக இந்த புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (க-இ)

12th EDITION

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
**Jaffna International Trade Fair**
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்
www.jitf.lk jitf.lk

JITF 2021

CONCURRENTLY WITH
Higher Education & Career Exhibition
KALVI JAFFNA 2021

**POSTPONED!**
**AWAIT NEW DATES**

**கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டது புதிய திகதி பின்னர் அறிவிக்கும்வரை**

MAIN SPONSOR: INSEE CEMENT
OFFICIAL PARTNERS — SAFETY & HYGIENE: SUN — FOOD — TELECOMMUNICATION: SLTMOBITEL — PRINT MEDIA — ORGANIZED BY: LECS — IN ASSOCIATION WITH — ENDORSED/SUPPORTED BY

ORGANIZED UNDER
MINISTRY OF HEALTH GUIDELINES
சுகாதார அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

More information: Imalka +94 71 7488107
imalka@saexhibitions.com

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12 . 04 . 1935

மறைவு
29 . 03 . 2020

## அமரர் பொன்னையா நாகம்மா

(இளைப்பாறிய ஆசிரியை)

**திதி: பஞ்சமி**

நீங்களும் குழந்தையுள்ளம் கொண்ட மகனும் எம்மைத்தேடி வந்தீர்கள்.
பெற்ற தாயாக என்னை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டீர்கள்.
உண்மையில் பெற்ற தாயாக அன்பு காட்டினீர்கள்.
உங்கள் பிள்ளையின் பிற்காலத்தை எண்ணி மிகவும் கவலை கொண்டீர்கள். மறைந்த எனது உடன்பிறந்த தம்பியின் நினைவாக எனது தம்பியாக பிள்ளைகளின் அருமை மாமாவாகவும் சீராகப் பார்த்து வருகின்றேன்.


**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (18.03.2021) வியாழக் கிழமை நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
கணேசு மனோறஞ்சினி (வளர்ப்புமகள்)
பொ.ஸ்ரீபவன் (மகன்)

சிறுவிளான்,
இளவாலை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வீரசிங்கம் கண்மணி

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கண்மணி அவர்கள் 28.03.2020 காலமாகி விட்டார். அன்னார் காலஞ் சென்ற செல்லத்துரை வீரசிங்கம் (சின்னத்தம்பி) அவர்களின் அன்பு மனைவியும் அருணகிரிநாதன் (ஜேர்மனி), இராமச்சந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற தவராசா, கணேசலிங்கம் (சுவிஸ்), பத்மினி தேவி (சுவிஸ்), கமலேஸ்வரி (தாவடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலாதேவி, தேவகி, தயாமதி, சுந்தரலிங்கம், பத்மகாந் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் முதலாம் ஆண்டு திவச நிகழ்வுகள் இன்று 18.03.2021 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஆருயிர் அன்னையே!*
*கண்ணை இமைகாப்பது போல்*
*அறுவரையும் காத்தீரே!*
*அவனியிலே எங்களை*
*தலை நிமிர்ந்து வாழ வைத்தீரே!*
*நாங்கள் உயிர் வாழும் வரை*
*உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்வோம்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*வடபத்திரகாளியை வேண்டுகின்றோம்*

பிறப்பு : 01.02.1942 இறப்பு : 28.03.2020

M.P தர்மலிங்கம் நினைவுதூபியடி,
தாவடி வடக்கு, கொக்குவில். 077 428 4205

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

புத்தாண்டு விசேட தள்ளுபடி

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T –சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புறொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.



அனைத்து வாடிக்கையாளர்களும் சுகாதார நடைமுறைகளை பேணவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்

காலம்: 20.03.2021 - 13.04.2021 வரை

(10)



# சேவை நலன் பாராட்டு விழா

## திருமதி இறாஜினி விமலசோதி
## SLTS - I

ஆசிரியர் - யா/ கட்டுவன்புலம் மகா வித்தியாலயம் தெல்லிப்பழை



Congratulations!

Congratulations

**சேவை விவரம்:**

1. 21.04.1982 - 31.01.1985 - கிளி / பூநகரி ம.வி
2. 01.02.1985 - 31.12.1986 - யா / கோப்பாய் ஆ.ப.கல்லூரி
3. 01.01.1987 - 02.01.1994 - யா / பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
4. 03.01.1994 - 31.06.1994 - யா / அளவெட்டி அருணோதய கல்லூரி
   - யா/ யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
5. 01.07.1994 - 21.09.2011 - யா / மல்லாகம் ம.வி.
6. 22.09.2011 - 07.09.2017 - யா / குளமங்கால் றோ.க.த.க. பாடசாலை
7. 08.09.2017 - 19.02.2019 - யா / குளமங்கால் றோ.க.த.க. பாடசாலை
   யா/ கட்டுவன் புலம் ம.வி
8. 20.02.2019 - 18.03.2021 - யா / கட்டுவன் புலம் ம.வி

**18.03.2021 அன்று தனது சேவைக் காலத்தை பூர்த்திசெய்து ஓய்வுபெறும் எமது பாடசாலை ஆசிரியை இவ் வையகத்தில் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்**

வாழ்த்துவோர்:

## யா/ கட்டுவன் புலம் மகாவித்தியாலம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

# கொக்குவில் இந்துக் கல்லூரியின் 110வது ஆண்டு நிறைவை குறிக்கும் திறன் வகுப்பறைத் திறப்பு விழா

## கொக்குவில் இந்துக் கல்லூரியின் உலகளாவிய பழைய மாணவர் சங்கங்களின் வாழ்த்துச்செய்தி

எமது கல்லூரியின் வரலாற்றில் இன்று ஓர் பொன்நாள் ஆகும். கற்றல்துறைசார் தொழில்நுட்ப வளர்ச்சியின் ஓர் புதிய அத்தியாயத்தினுள் எமது மாணவர்கள் கால்த்தடம் பதித்திடும் செய்தியினை தெரிவித்திடும் நன்நாள்.

உலக நாடுகள் அனைத்தையும் COVID - 19 என்று அழைக்கப்படும் பேரழிவு வைரஸ் தாக்கப் பரவலினால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு அனைத்து துறைகளும் முடக்கப்பட்டு அனைத்துலகிலும் மக்கள் பாரிய அழிவுகட்கும், துன்பங்களுக்கும் முகம் கொடுக்க நேர்ந்தது மட்டுமன்றி நாளாந்த உழைப்பாளிகள் தொழிலின்றி வருமானமின்றி பட்டினியை எதிர் கொண்ட வேளையிலே எமது கல்லூரியின் அனைத்துலக பழைய மாணவர் சங்கங்கள் ஒன்றிணைந்து செயலில் இறங்கினோம். எமது கல்லூரியினதும் அயல் பாடசாலைகளினதும் மாணவர்களிற்கு உலர் உணவு வழங்கும் பெரும் நிவாரணப் பணியில் ஈடுபட்டோம்.

இவ்வேளையில் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டு மாணவர் கல்வி தடைப்பட்டபோது அதனை எதிர்கொள்ளும் புதிய முறைகள் பற்றி சிந்திக்க ஆரம்பித்தோம். தொழில்நுட்ப வளர்ச்சியில் எமது பார்வையை செலுத்தியவேளை "திறன் வகுப்பறைத் திட்டம்" என்ற எண்ணக்கரு எம்மில் உதயமாகியது. எமது மைதானத்தின் கிழக்குத் திசையில் தேசிய நல்லிணக்க அமைச்சின் திட்டத்தின் கீழ் அமைக்கப்பெற்ற புதிய 12 வகுப்பறைகள் கொண்ட கட்டிடத் தொகுதிக்கு தளபாடங்களும், திறன் பலகைகளும் (Smart Boards) கொண்டதான திறன் வகுப்பறைத்திட்டம் என ஆரம்பித்து இன்று அதனையும் தாண்டி 25 திறன் வகுப்பறைகளை முதற் கட்டமாக திறக்கும் இன்றைய நிகழ்வு சாத்தியமாயிற்று. இவ்வெற்றிக்கு காரணமாக அனைத்துலகிலும் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் ஒன்றிணைந்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் உலகளாவிய பழைய மாணவர் சங்கம் என்னும் ஓர் அணியாக உருவாகி ஒற்றுமையாக செயற்பட்டமையும், உலகம் அனைத்திலும் பரந்துவாழும் பழைய மாணவர் அணிகள் அணிஅணியாக திரண்டமையும், தனிப்பட்ட பழைய மாணவர்கள் தாங்களாக முன்வந்து இத்திட்டத்தில் இணைந்து கொண்டமையும் கல்லூரியின் அதிபர் தலைமையிலான நிர்வாகம் சகலவிதத்திலும் ஆலோ சனைகள் வழங்கி ஒத்துழைத்தமையும் என எல்லாம் ஒன்றாய் அமையப் பெற்றமையே அடிப்படையாக அமைந்தது.

இத்திட்டத்தின் மூலம் கல்லூரி மாணவர்கள் நல்ல பயனைப் பெற்று கல்வியில் மேலும் சாதனைகள் புரிந்து நல் மானிடராய் வாழ்ந்திட அனைத்துலக பழைய மாணவர்கள் சார்பாக வாழ்த்துகின்றோம்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்)**
**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கொழும்பு)**
**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐக்கிய இராச்சியம்)**
**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா)**
**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (அவுஸ்ரேலியா – சிட்னி)**
**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (அவுஸ்ரேலியா – விக்ரோறியா)**

## "BE SMART PROJECT - 2020" தொடர்பில் அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது கொக்குவில் இந்துக் கல்லூரியின் 110வது அகவை நிறைவையொட்டி கல்லூரியின் உலகளாவிய பழையமாணவர் சங்கங்கள், பழையமாணவர் அணிகள் (Batch), கல்லூரியின் பழையமாணவர்களின் நம்பிக்கைநிதியங்கள், பழையமாணவர்களது குடும்பங்கள் ஆகியவற்றின் பங்களிப்புடன் கல்லூரி நிர்வாகத்துடன் இணைந்து கல்லூரியின் அடுத்த கட்டத்தை நோக்கிய பாய்ச்சலுக்குத் தயார்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட "BE SMART - 2020" செயற்றிட்டத்தினூடாகக் கிடைக்கப்பெற்றுள்ள Inter Active Board 25 இனையும், நீண்டகாலக் குறைபாடாகக் காணப்பட்ட மாணவர்களுக்கான தளபாடத் தேவையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் வகையில் வழங்கப்படும் தளபாடத் தொகுதியினையும் வைபவ ரீதியாகக் கல்லூரிக்குக் கையளிக்கும் நிகழ்வினைக் கல்லூரிச் சமூகம் மனப் பூரிப்புடன் வரவேற்று நிற்கின்றது.

2020 March மாதத்தில் அரம்பித்த உலகளாவிய Covid - 19 பெருந் தொற்றின் மத்தியில் உலகம் முடங்கிய வேளை கனவுடன் விழித்திருந்த கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம் தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஓரணியில் சங்கமித்தது. இதுவரை தனித்தனியாக இயங்கிய அத்தனை சங்கங்களும், பழைய மாணவர் அணிகளும், பழைய மாணவர்களும், கல்லூரி நிர்வாகமும் கல்லூரியின் மணிக் கொடியின் கீழ் கல்லூரி மகுடவாசகமாகிய "கற்றதொழுகு" என்பதற்கிணங்கவும் "கொக்குவில் இந்து நமதே" என்ற உணர்வுப் பெருமிதத்துடனும் உயிர் அச்சம் கொண்ட பேரிடரிலும் ஒன்று சேர்ந்து முனைப்புப் பெற்றுக் கல்லூரியின் கனவினை நனவாக்கியமைக்கு இன்றைய நாள் ஒரு சாட்சியாக விளங்குகின்றது. அது மட்டுமல்ல வேற்றுமையிலும் ஒற்றுமை காணின் உரிய இலக்குகளை முனைப்புடன் அடைய முடியும் என்பதற்கு ஏனைய கல்லூரிகளுக்கு ஒரு முன் உதாரணமாகவும் விளங்க முடிந்தது. இன்றைய உலகியல் சவால்களுக்கு முகம் கொடுத்து உலகளாவிய பிரசைகளாக மாணவர்களை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

காலத்தின் தேவையறிந்து இன்றைய சூழலுக்கும், நாளைய கல்விப் போக்கின் மாற்றத்திற்கும் எம்மைத் தயார்படுத்தும் சரியான தருணத்தில் மிகச் சரியானதாகவும், தரிசன நோக்குடனும் முன்னெடுக்கப்பட்ட 'BS-2020' செயற்றிட்டத்திற்கு இன்று கல்லூரியின் ஆசிரியர்களையும், மாணவர்களையும் இசைவுபடுத்தும் வேலைத்திட்டத்தையும் கல்லூரி மட்டத்தில் நடைமுறைக் கிட்டு வருவதுடன்மட்டுமல்லாது எமது கல்லூரியின் கணினி மென்பொருள் வல்லுநர்களின் பங்குபற்றுதலுடன் கல்லூரிக்கான கற்றல் மென்பொருள் ஒன்றினையும் 2021 இல் இருந்து மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் திருவருள் கூடியுள்ளது. உரிய வகுப்பு மாணவர்கள் தமக்கான கடவுச் சொல்லினைப் பயன்படுத்தி சுயகற்றலில் ஈடுபட இந்தக் கற்றல் மென்பொருள் துணை நிற்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். பரீட்சார்த்த நடவடிக்கையாக அறிமுகமாகும்.

இந்தக் கற்றல் மென்பொருளானது எதிர்காலத்தில் சிறப்பான வகிபாகத்தை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் என எதிர்பார்க்கின்றோம். அது மட்டுமல்லாமல் கல்லூரி நிலையில் ஆசிரியர்களின் பங்கு பற்றுதலுடன் கல்லூரிக்குத் தனித்துவமான கற்றல் வளமாக 'YOUTUBE' உம், திறந்த கற்றல் வளமாகச் சமூகத்தின் பயன்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்றைய தினம் 110வது அகவையினை முன்னிட்டு எமது கல்லூரிச் சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட 'BE SMART - 2020" செயற்றிட்டத்தின் பங்காளர்கள் குறிப்பாக Covid - 19 பெருந் தொற்றின் போதும் எடுத்துக் கொண்ட கருமத்தில் ஏற்பட்ட அத்தனை சவால்களையும் தகர்த்தெறிந்து இச் செயற்றிட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப் பக்கதுணையாக இருந்த அத்தனை பழைய மாணவர்களையும், கல்லூரியின் நிர்வாக அணியினரையும் கல்லூரி அன்னையின் சார்பில் எல்லாம் வல்ல சிவசுப்பிரமணியப் பெருமானின் திருவருளும், யோகர் சுவாமிகளின் குருவருளும் துணை நிற்க வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

திரு. ம. ஞானசம்பந்தன்,
அதிபர்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## ஓய்வுநிலை அதிபர்களின் வாழ்த்துச் செய்தி

உலகளாவிய கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து வழங்கிய திறன் பலகைகள் (Smart Boards) மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேலும் ஒருபடி உயர்த்தும் என்பது யாவரும் அறிந்ததே. அந்த வகையில் அனைத்து பழைய மாணவர் சங்கங்களுக்கும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரியன. அண்மைய காலங்களில் வகுப்பறைகளில் புகுத்தப்பட்ட திறன் பலகையானது ஒரு ஊடாடும் (Interactive) வெண்பலகை ஆகும். - கணணியின் செயற்பாடுகளை திறன் பலகை மூலம் வெளிப்படுத்தலாம். இவ் வகையான அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்கிய பழைய மாணவர் சங்கத்தினருக்கு மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றிகள்.

**திரு. அ.பஞ்சலிங்கம்.**

---

ஒரு கல்லூரி பெயரோடும் புகழோடும் விளங்குவதற்கு அக் கல்லூரி கொண்டிருக்கும் வளங்கள், திறனான மாணவர்கள், சிறந்த ஆசிரியர்கள், நல்ல கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் கற்றலுடனான இதர செயற்பாடுகள் என்பவற்றிலேயே தங்கியுள்ளது. அந்த வகையில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் உலகளாவிய பழைய மாணவர் சங்கங்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காண்பித்து உதவி வருவது பாராட்டுக்குரியதாகும். கல்லூரிப் பழையமாணவர் சங்கம் எல்லோரது உதவிகளையும் பெற்று நடைமுறைப்படுத்துவதில் ஆற்றல் மிக்கதொன்றாக விளங்குகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக இன்றைய தினம் கல்லூரியில் நடைபெறும் "திறன் வகுப்பறைகள்" திறப்பு விழா விளங்குகின்றது. இன்று 25 திறன் வகுப்பறைகள் ஆரம்பித்து வைக்கப்படுகின்றன. இவற்றின் முழுப் பயனையும் மாணவர்கள் பெற்று தமது திறமைகளை வளர்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன், இதற்காக உதவிய அனைவருக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.பொ.கமலநாதன்**

---

தேசிய நல்லிணக்க அமைச்சின் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 12 வகுப்பறைகள் கொண்ட அழகிய கட்டிடத் தொகுதியானது எமது கல்லூரிக்கு வழங்கப்பட்டது. அக்கட்டிடத்தை மையமாகக் கொண்டு எமது கல்லூரியின் உலகளாவிய பழைய மாணவர் சங்கங்களின் தலைமையில் அணி சேர்ந்த அனைத்துலகிலும் வாழும் பழைய மாணவர்கள், பழைய மாணவர் அணியினர் ஒன்றிணைந்து 12 வகுப்பறைகளுக்குமான புதிய தளபாடங்களையும், 25 திறன் வகுப்பறைகளையும் எம் கல்லூரிக்கு வழங்கி உதவியுள்ளனர். இப் பாரிய வளங்களை புதிய தொழில்நுட்பக் கற்றல் முறைமைக்குள் உள்வாங்கி இவ் உபகரணங்களை உரியமுறையில் பாதுகாத்துப் பேணி மாணவர்கள் உச்ச பயன்பாட்டினைப் பெற்று கல்வியிலும் அறிவிலும் சிறப்பாக விளங்கிட எமது கல்விச் சமூகம் உதவி புரிந்து இத்திட்டம் சிறப்பான வெற்றியினை பெற்றிட வாழ்த்துகின்றேன்.

**திரு.அ.அகிலதாஸ்**

## KOKUVIL HINDU COLLEGE
### GLOBAL OLD STUDENTS' ASSOCIATION
SMART BOARDS & NEW FURNITURE PROJECT - 2020

| SMART BOARD | |
|---|---|
| கொக்குவில் பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)<br>K.H.C.O.S.A - KOKUVIL (Parent Association) | 2 |
| ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கம்<br>K.H.C.O.S.A – UK | 1 |
| கனடா பழைய மாணவர் சங்கம்<br>K.H.C.O.S.A - CANADA | 1 |
| அவுஸ்ரேலியா (சிட்னி) பழைய மாணவர் சங்கம்<br>K.H.C.O.S.A - AUSTRALIA (SYDNEY) | 1 |
| கொழும்பு பழைய மாணவர் சங்கம்<br>K.H.C.O.S.A – COLOMBO | 1 |
| க.பொ.த (சா.த) 1975<br>G.C.E (O/L) 1975 | 2 |
| 1979 - HNCE Batch (கனடா ப.மா.ச ஊடாக)<br>1979 - HNCE Batch (via O.S.A Canada) | 1 |
| 1979 - HNCE Batch (ஐக்கிய இராச்சியம் ப.மா.ச ஊடாக)<br>1979 - HNCE Batch (via O.S.A UK) | 1 |
| க.பொ.த (உ.த) 1985<br>G.C.E (A/L) 1985 | 1 |
| [illegible] | 1 |
| க.பொ.த (உ.த) 1986 (ப.மா.ச - கனடா ஊடாக)<br>G.C.E (A/L) 1986 & G.C.E (O/L) 83 (via O.S.A - CANADA) | 1 |
| க.பொ.த (உ.த) 1986 (ப.மா.ச - ஐக்கிய இராச்சியம் ஊடாக)<br>G.C.E (A/L) 1986 & G.C.E (O/L) 83 (via O.S.A - UK) | 1 |
| G.C.E (A/L) 1987 & G.C.E (O/L) 84 (via O.S.A - UK) | 1 |
| க.பொ.த (உ.த) 1990 மற்றும் க.பொ.த (சா.த)87<br>G.C.E (A/L) 1990 & G.C.E (O/L) 87 | 1 |
| க.பொ.த (உ.த) 1994 மற்றும் க.பொ.த (சா.த) 91<br>G.C.E (A/L) 1994 & G.C.E (O/L) 91 | 2 |
| க.பொ.த (உ.த) 1996 மற்றும் க.பொ.த (சா.த) 93<br>G.C.E (A/L) 1996 &G.C.E (O/L) 93 | 1 |
| க.பொ.த (உ.த) 1997 மற்றும் க.பொ.த (சா.த) 94<br>G.C.E (A/L) 1997 &G.C.E (O/L) 94 | 1 |
| G.C.E (A/L) 1999 & G.C.E (O/L) 96 (via O.S.A Kokuvil) | 1 |
| Mr. S.Sriranjan on behalf of VASUKI FOUNDATION (via O.S.A UK) | 1 |
| முருகண்டி அறக்கட்டளை<br>Murukandy Foundation | 1 |
| In memory of Late [illegible] - Jeyabalaratnam (via O.S.A - Kokuvil) | 1 |
| திரு.சொ.சற்குணநாதன் (ப.மா.ச.ஐக்கிய இராச்சியம் ஊடாக)<br>Mr. S. Satkunanathan (via O.S.A – UK) | 1 |

| NEW FURNITURE | |
|---|---|
| ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கம்<br>K.H.C.O.S.A – UK | 1 |
| அவுஸ்ரேலியா (சிட்னி) பழைய மாணவர் சங்கம்<br>K.H.C.O.S.A - AUSTRALIA (SYDNEY) | 1 |
| அவுஸ்ரேலியா (விக்ரோரியா) பழைய மாணவர் சங்கம்<br>K.H.C.O.S.A - AUSTRALIA (VICTORIA) | 1 |
| கொழும்பு பழைய மாணவர் சங்கம்<br>K.H.C.O.S.A – COLOMBO | 1 |
| க.பொ.த (சா.த) 1975<br>G.C.E (O/L) 1975 | 1 |
| க.பொ.த (உ.த) 1990 மற்றும் க.பொ.த (சா.த)87<br>G.C.E (A/L) 1990 & G.C.E (O/L) 87 | 1 |
| க.பொ.த (உ.த) 1996 மற்றும் க.பொ.த (சா.த) 93<br>G.C.E (A/L) 1996 &G.C.E (O/L) 93 | 1 |
| க.பொ.த (உ.த) 1997 மற்றும் க.பொ.த (சா.த) 94<br>G.C.E (A/L) 1997 &G.C.E (O/L) 94 | 1 |
| Murukandy Foundation | 1 |
| Mr.M.V.Jeganathan (Past President - OSA - Canada) | 1 |
| [illegible] (via O.S.A - CANADA) | 1 |
| [illegible] (via O.S.A - CANADA) | 1 |

SMART BOARDS - 25, NEW FURNITURE - 12 CLASSROOMS

**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**உலகளாவிய பழைய மாணவர் சங்கங்கள்**

# நாயாற்றில் அனுமதியின்றி வாடி அமைத்து வெளிமாவட்ட மீனவர் தொழில் நடவடிக்கை

## உள்ளூர் மீனவர்கள் பாதிப்பு; கைவிரித்தார் வடக்கு ஆளுநர்



முல்லைத்தீவு, மார்ச் 18

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் அனுமதி எதுவும் பெறப்படாமல் வெளிமாட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் வாடியமைத்து தங்கிநின்று தொழிலில் ஈடுபடுவதால் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் கடற்தொழிலுக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் இப் பிரச்சினையிலிருந்து நழுவியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெற்றிக் ஜோன்சன் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு கடலில் வெளிச்சம் பாய்ச்சி தொழில் செய்கின்ற சட்டவிரோத தொழில் நடைபெறுகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் மற்றும் கடற்படைதரப்பினர்கள் தவறி விட்டன.

இதன் காரணமாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். புல்மோட்டைப் பகுதியில் இருந்து வருபவர்களே வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிக்கும் சட்டவிரோத தொழிலில் ஈடுபடுகின்றனர். இது தடுக்கப்பட வேண்டும். கடற்படை இதனைக் கட்டுப்படுத்துவதில்லை. இதே நேரத்தில் நாயாறுப் பகுதியில் நூற்றுக்கணக்கான வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வாடிகள் அமைத்து தொழில் செய்கின்றனர். கடந்த பத்தாண்டுகளுக்கு முப்பது வரையான அனுமதிகளே சமாசத்தால் வழங்கப்பட்டது. ஆனால் தற்போது அனுமதிகள் இன்றி நூற்றுக்கணக்கான வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் நாயாற்றுக் கடற்கரையில் வாடிகள் அமைத்து தொழில் புரிகின்றனர்.

இதனால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவே உரிய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்களில் ஒருவரான வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ், கடற்றொழில் சம்பந்தமாக கடற்றொழில் அமைச்சர்தான் முடிவெடுக்க வேண்டும் என்றார்.

அமைச்சரிடமும் இப்பிரச்சினைகளைத் தெரியப்படுத்தி உள்ளோம். ஆனால் தீர்வுகள் கிடைக்கவில்லை என சமாசத் தலைவர் தெரிவித்தார். (ப-13)

# சர்வதேச நீதிகோரி இருவர் உணவு தவிர்ப்பு

திருமலை, மார்ச் 18

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளை சர்வதேசம் கவனத்தில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தைச் சேர்ந்த இருவர் திருமலையில் சாகும் வரையான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சங்கத்தின் திருகோணமலை மாவட்ட தலைவி திருமதி. நா. ஆஷா மற்றும் திருமதி இரா. கோசலாதேவி இருவருமே 3 ஆவது நாளாக திருகோணமலை சிவன் ஆலய முன்றலில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் திருகோணமலை மாவட்டத் தலைவி திருமதி நா. ஆஷா தெரிவித்ததாவது;

இலங்கை அரசால் எவ்வித தீர்வும் கிடைக்கப் பெறாததால் எமது போராட்டங்களை நாங்கள் சர்வதேசத்தை நோக்கி நகர்த்தியிருக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி எத்தனையோ பெண்கள் கண்ணீருடன் வீதியில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் கோரிக்கைகள் குறித்து சர்வதேசம் கவனமெடுத்து தீர்வு பெற்றுத் தர வேண்டும் - என்றார். (ப)

# போதைப் பொருள்களுடன் வவுனியாவில் இருவர் கைது



வவுனியா, மார்ச் 18

வவுனியாவில் கேரளாக் கஞ்சா மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நெளுக்குளம் மற்றும் குகநகர் பகுதிகளில் நேற்றுமுன்தினம் வவுனியா பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுசிறு பொதிகளாக வைக்கப்பட்டிருந்த கஞ்சா மற்றும் ஹெரோயினை அவர்கள் உடைமையில் வைத்திருந்தனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட அவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-110)

# மூன்றரை மில்லியன் அவசர அழைப்புக்கள்

1990 என்ற சுவசெரிய நோயாளர் காவு வண்டிச் சேவைக்கு, இதுவரை 3.5 மில்லியனுக்கும் அதிகமான தொலைபேசி அழைப்புகள் கிடைத்துள்ளன என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். (க-இ)

# ஊடக ஆய்வு நிறுவனம் அமைக்கத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 18

தொழில் முறைத் திறன்களைக் கொண்ட ஊடக வல்லுநர்களை உருவாக்குவதற்கு, எதிர்வரும் சில மாதங்களுக்குள் ஊடக ஆய்வு நிறுவனமொன்றை அமைக்க வெகுஜன ஊடக அமைச்சுத் திட்டமிட்டுள்ளது.

'சுபீட்சத்தின் நோக்கு' என்னும் கொள்கைப் பிரகடனத்தின் கீழ், ஊடகக் கற்கைக்கான உயர்கல்வி நிறுவனமாக இது ஸ்தாபிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மிகவும் திறமையான ஊடக வல்லுநர்களை உருவாக்குவதற்காக சர்வதேச தரத்துக்கேற்ப அரச அனுசரணையுடன் இந்தக் கல்வி நிறுவனம் உருவாக்கப்படும்.

இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று கடந்த திங்கட்கிழமை வெகுஜன ஊடக அமைச்சில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் தலைமையில் இடம்பெற்றது. (ற-இ)

# குழந்தைகளுக்கு பூச்சாண்டி காட்ட 119 க்கு அழைப்பு எடுக்காதீர்கள்!

## பொலிஸ் பேச்சாளர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 18

குழந்தையை பயமுறுத்தி உணவூட்டுவதற்காக பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 க்கு தினமும் அழைப்புக்கள் வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு நாளொன்றுக்கு ஆயிரத்துக்கு 800க்கு மேற்பட்ட அழைப்புகள் வருகின்றன. அதில் பல அழைப்புக்கள் வினோதமானவையாக இருக்கின்றன. அத்துடன் வீட்டுக்குள் பாம்பு வந்துவிட்டது என்று தெரிவித்தும் கூட பொலிஸ் அவசர இலக்கத்துக்கு அழைப்பு வருகின்றது.

எனவே, இவ்வாறான அழைப்புக்களை மேற்கொள்ளாமல். அவசரமான விடயங்களுக்கு மாத்திரம் 119 என்ற தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கிறேன் -என்றார். (ஐ-இ)

# குரோதத்தை விதைக்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர

## வழக்குத் தாக்கல் செய்யக் கோருகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 18

ஓர் இனத்தை இலக்கு வைத்தும், இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் விதத்திலும் கருத்துகளை முன்வைக்கும் அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு எதிராக 'ஐ.சி.சி.பி.ஆர்.' சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"எதிரணி உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் போலிக் கருத்துகளை முன்வைக்கின்றனர் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனால் ஆளுங்கட்சியினரே மக்களைப் பிழையாக வழிநடத்துகின்றனர். புர்காவுக்கு தடைவிதிக்கப்படும். அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறுகின்றார். ஆனால் புர்காவுக்கு தடைவிதிக்கப்படாது என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு மாறுபட்ட கருத்துகள் வெளியாவதால் நாட்டுக்கு சர்வதேச மட்டத்தில் அபகீர்த்தி ஏற்படுகின்றது.

அத்துடன், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இனங்களுக்கிடையில் குரோதத்தை விதைக்கும் விதத்திலும், முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலும் கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். ஓர் இனத்தை இலக்கு வைத்து ஆடை தொடர்பில் கருத்து வெளியிடுகின்றார். எனவே, அவருக்கு எதிராக INTERNATIONAL COVENANT ON CIVIL & POLITICAL RIGHTS (ICCPR) கீழ் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். ஆனால் எதிரணி உறுப்பினர்களுக்கு ஒரு விதத்திலும், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு மற்றுமொரு விதத்திலுமே சட்டம் செயற்படுகின்றது.

அஸாத் சாலியைக் கைதுசெய்து எதிரணி உறுப்பினர்களுக்கு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்துடன், யுவதியொருவரின் வீட்டுக்கு பொலிஸாரை அனுப்பி, இளைஞர்களுக்கும் இந்த அரசு மிரட்டல் விடுத்துள்ளது. இது ஜனநாயகத்துக்கு விடுக்கப்படும் பெரும் அச்சுறுத்தலாகும்.

எனக்கு எதிராக கருத்துகளை முன்வைத்த விஜயதாச ராஜபக்சவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு முன்வைக்கவுள்ளேன்." -என்றார். (க-44)

# இதய அஞ்சலி

ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது. (தி.பா 116: 15 )

பிறப்பு 24 - 10 - 1956



இறப்பு 16 - 03 - 2021

**அமரர் கனியூட் மாசில்லாமணி கிறிசாந்துஸ் வேஜின் டயஸ்**

உணவு தந்து உறையுள் தந்து எமைக் காத்தாய் தாயே
ஏன் எம்மை தவிக்கவிட்டு விண்ணுலகு சென்றாய் தாயே
நாம் உள்ளவரை எம் இயக்கம் உள்ளவரை
நீர் செய்த நன்றி மறவோம் உம்மை மறவோம் தாயே

பிரிவால் துயருறும் தலைவர், உறுப்பினர்கள்
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (T.E.L.O)



# ஆங்கில வகுப்புக்கள்

(கிளிநொச்சியில்)

வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்
தரம் 6 - 11 வரை (School Sylabus)
Spoken and Grammar English for Adults

தொடர்பு 077 437 8795



# சாவகச்சேரி வர்த்தக கட்டம் வாடகைக்கு

கண்டி வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள 2500 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட வர்த்தக கட்டடம் வாடகைக்கு உண்டு.

வங்கிகள், சுப்பர்மாக்கட், காட்சியறைகள் களஞ்சியசாலைகளுக்குப் பொருத்தமான இடம்

077 613 9559, 077 085 1881



# கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர்ப் பூக்கள்



**அமரர் "சிதம்பரஜோதி" சுப்பையா கணபதிப்பிள்ளை**

அவர்கள் முதுபெரும் கலைஞனாகவும், கலாரசிகனாகவும் வாழ்ந்து கலையை பாதுகாக்கும் காவலனாக சிறப்பிடம் பெற்ற அமரர் "சிதம்பரஜோதி" சுப்பையா கணபதிப்பிள்ளை அவர்களின் பிரிவுத்துயர் அடைந்துள்ள நாம் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தன் குஞ்சிதபாதம் சேரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்.
கிழவன்காடு கலாமன்றம். காரைநகர், யாழ்கிளை.



# துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி **மணிவண்ணன் இசைப்பிரியா**
அவர்களின் அன்புத் தந்தை
**கனகசபை சாந்தசோதி**
அவர்கள் (16.03.2021) செவ்வாய்க்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி


# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
# ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 06, வனுவில் ஒழுங்கை, 13 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சபாபதி சிதம்பரப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை நுணாவில் கோவிந்தர் கைம்பெண் சின்னப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு C.கந்தர் முகதாவில் 25.11.1930 ஆம் திகதியிடப்பட்ட 20818ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் அவ்வூர் சபாபதி சிதம்பரப்பிள்ளை பெண் சிதம்பரம் என்பவருக்கு நிலப்பரப்பு 9 ¼ இல் ¼ பங்கு சொரியலாக நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர், நுணாவில் கோவிந்தர் கைம்பெண் சின்னப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு C.கந்தர் முகதாவில் 12.12.1936 ஆம் திகதியிடப்பட்ட 25816ம் இலக்க உறுதி மூலம் சின்னத்தம்பி பெண் அமிர்தவல்லிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

பின்னர், நுணாவில் சுவாமிநாதர் விசுவலிங்கமும் சின்னத்தம்பி கைம்பெண் பொன்னுப்பிள்ளையும் பிரசித்த நொத்தாரிசு C.கந்தர் முகதாவில் 10.01.1937 ஆம் திகதியிடப்பட்ட 25887ம் இலக்க உறுதி மூலம் சுவாமிநாதர் சின்னத்தம்பிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

பின்னர், நுணாவில் சுவாமிநாதர் சின்னத்தம்பியும் பெண் அமிர்தவல்லியும் ஆகியோர் முதலாம் பகுதியாகவும் அவ்வூர் சபாபதி சிதம்பரப்பிள்ளையும் பெண் சிதம்பரமும் சின்னப்பா சபாரத்தினமும் ஆகியோர் இரண்டாம் பகுதியாகவும் சேர்ந்து பிரசித்த நொத்தாரிசு V.கனகசபை முக்தாவில் 05.06.1953 ஆம் திகதியிடப்பட்ட 4133ம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் பிரிவிட்டுக்கொண்டுள்ளனர்.

பின்னர், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நுணாவில் மத்தி தற்போது கனடா சின்னத்தம்பி இராமச்சந்திரன் என்பவர் இல 224/8, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், சபாரட்ணம் சிவராஜா (தே.அ.அ.இல. 541243313V) மூலம் பிரசித்த நொத்தாரிசு S.சிவரூபன் முகதாவில் 30.12.2012 ஆம் திகதியிடப்பட்ட 4624ம் இலக்க விசேட அற்றோனித்தத்துவத்தின் பிரகாரம் பிரசித்த நொத்தாரிசு சி.சிவவாணி முகதாவில் 12.07.2020 ஆம் திகதியிடப்பட்ட 528ம் இலக்க உறுதி மூலம் மருதங்கேணி செம்பியாம்பற்று தெற்கு, இராமநாதன் ரமேஸ்வரனுக்கு நிலப்பரப்பு 5குளி 06.12 இல் நிலப்பரப்பு 2ஐ அறுதியாக வழங்கியுள்ளார். மிகுதி நிலப்பரப்பு 2 குளி 14.10 ஐ பிரசித்த நொத்தாரிசு சி.சிவவாணி முகதாவில் 12.07.2020 ஆம் திகதியிடப்பட்ட 527ம் இலக்க உறுதி மூலம் வெளிவெட்ட வீதி, சிந்தாணிப்பிள்ளையார் கோயில் உத்தமகுரு சிவகுமார் என்பவர் அறுதியாகப் பெற்றுள்ளார்.

**ஆதனவிபரம் (இராமநாதன் ரமேஸ்வரனுக்குரியது)**
வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று நுணாவில் இறை "குடியிருப்பு வளவு" நிலப்பரப்பு 2 (இரண்டு). இதற்கு எல்லை

கிழக்கு : உத்தமகுரு சிவகுமாருக்குரிய ஆதனம்
வடக்கு : வனுவில் ஒழுங்கை
மேற்கு : தனியார் ஒழுங்கை
தெற்கு : குமாரசாமி சரவணபவனுக்கும் பெண் இராஜேஸ்வரிக்கும் மறு பெயருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

**ஆதனவிபரம் (உத்தமகுரு சிவகுமாருக்குரியது)**
வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று நுணாவில் இறை "குடியிருப்பு வளவு" நிலப்பரப்பு 2 (இரண்டு) குளி 14.10 (பதினான்கு தசம் ஒன்று பூச்சியம்). இதற்குஎல்லை

கிழக்கு : செல்லத்துரை செந்தில்மணிக்குரிய ஆதனம்
வடக்கு : வனுவில் ஒழுங்கை
மேற்கு : இராமநாதன் ரமேஸ்வரனுக்குரிய ஆதனம்
தெற்கு : குமாரசாமி சரவணபவனுக்கும் பெண் இராஜேஸ்வரிக்கும் மறுபெயருக்குமுரிய ஆதனம். அடங்கலும்.

தற்போது இராமநாதன் ரமேஸ்வரனும் உத்தமகுரு சிவகுமாரும் இவ்வாதனத்தின் பகுதிகளை தங்களது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ, தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**


# ஈர விழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்

**அமரர் திருமதி கதிர்காமசிங்கம் வசந்தி**



ஓராண்டு ஆகிவிட்டதாம் அம்மா
ஒரு கணமும் அவ்வாறு நினைக்க
- இயலவில்லை
ஓராண்டு என்ன அம்மா
ஓராயிரம் ஆண்டுகளானாலும் எம்
நெஞ்சங்களிலே என்றுமே!
இளமையான தோற்றமும்
இன்று பூத்த பூப்போன்ற முகமும்
நினைத்துப் பார்க்கின்றோம்
நிற்கதியாய் நிற்கிறோம்
கதைக்கவும் முடியவில்லை
நினைக்காமல் இருக்கவும்
- முடியவில்லை
நினைந்து நினைந்து
நீ வருவாயா எனத் தவிக்கிறோம்

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

கணக்கர்வளவு, கந்தரோடை, சுன்னாகம்.

அன்னை மடியில் 18.03.1961 — ஆண்டவன் அடியில் 29.03.2020



# சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையம்
## மனித உரிமைகள் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையமானது சமூகத்தில் மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் தன்னிச்சையாக செயற்படக்கூடிய மனித உரிமை பாதுகாவலர்களை உருவாக்கும் நோக்கில் மனித உரிமை தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியினை நடத்த உள்ளது.
குறித்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது.

- சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும்.
- மூன்று மாதத்திற்கான கற்கை நெறி.

### விண்ணப்பிப்பதற்கான அடிப்படை தகைமைகள்

01. க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ், ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
02. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
03. மனித உரிமை செயற்பாடுகளில் ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

01. சுயவிபர கோவையை தபால் மூலமாகவோ / மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.
02. விண்ணப்ப முடிவுத் திகதி 31.03.2021.

### மேலதிக தொடர்புகளுக்கு

தொ.பே இல. : 021 224 1494
மின்னஞ்சல் : lhrchumanrightsunit@gmail.com
முகவரி : No. 64 Temple Road, Jaffna.

## 14ம் ஆண்டு நினைவஞ்சலி | 5ம் ஆண்டு நினைவஞ்சலி | 11ம் ஆண்டு நினைவஞ்சலி





| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|---|---|
| 19.11.1926 | 23.01.2007 | 22.07.1934 | 13.03.2016 | 05.07.1928 | 19.02.2010 |

| கந்தன் அம்பிகைபாகன் | அம்பிகைபாகன் தங்கம்மா | ஆழ்வான் நடேசன் |
|---|---|---|
| திதி-பூர்வபக்க பஞ்சமி | திதி-பூர்வபக்க பஞ்சமி | திதி-பூர்வபக்க பஞ்சமி |



பாசத்தின் உறைவிடமாய்
பாச மலர்களாய் பரனியிலே வாழ்ந்தீர்கள்
எம்மையெல்லாம் நல்வழிப்படுத்தி
எமக்காக வாழ்ந்த உள்ளங்களே!
ஆண்டுகள் சில கழிந்தாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்
என்றும் வாழ்வீர்கள் எம் மனதுள்.



குடும்பத்தினர்.

## ஆதன பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை

**உப அலுவலகம், ஏழாலை. வட்டாரம்-03, சுன்னாகம் புத்தூர் வீதி, ஆதன இலக்கம் 55, புன்னாலைக்கட்டுவன் தெற்கு,**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் தெற்கு புன்னாலைக்கட்டுவன் எனும் முகவரியில், வட்டாரம் - 03, சுன்னாகம் புத்தூர் வீதி. ஆதன இலக்கம் 55ல் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் பேரம்பலம் எனும் பெயரில் உள்ளது.

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தெற்குப்பகுதி, வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப்பிரிவு, J/203 கிராமசேவகர் பிரிவு, ஏழாலை கோவிற்பற்று, ஏழாலை தெற்கு இறை, "பச்சிலைப்பளையன்", நிலப்பரப்பு பதினைந்து (நில.பர 15) இதற்கு எல்லைகள் கிழக்கு பாதை 12 அடி அகலம், வடக்கு செல்லையா மாணிக்கத்துக்குரிய ஆதனம், மேற்கு குத்தகைக்காணி, தெற்கு முத்தர் கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம் இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும் எனக்குறிப்பிடப்பட்ட ஆதனமானது 2197ம் இலக்க , 2015.04.23ம் திகதிய பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்திற்குமாரன் (கொழும்பு) எழுதிய அறுதி உறுதி மூலம் இராஜரூபினி நிரஞ்சன் என்பவருக்கு அறுதியாக வந்தடைந்துள்ளது. உத்தரவு பெற்ற நில அளவையாளர் N.கணநாதன் அவர்களின் 2015.02.23 திகதிய 15010ம் இலக்க நில அளவை வரைபடத்தில் துண்டு-01 எனக்குறிப்பிடப்பட்ட இவ்வாதனமானது நிலப்பரப்பு 09 குழி 11.8 அளவுடையதாக காணப்படுகின்றது. இவ்வாதனத்தினை பிரதேச சபை ஆதனவரிப் பதிவேடுகளில் இராஜரூபினி நிரஞ்சன் என்பவரின் பெயரில் பெயர் மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனமானது ஊரெழு வடக்கைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பு 05 சித்தார்த்த வீதி இலக்கம் 110/10 இல் வசிக்கும் பேரம்பலம் பரமேஸ்வரநாதன் கைம்பெண் தேவமலர் ஆகியோரால் இராஜரூபினி நிரஞ்சன் என்பவருக்கு 2197ம் இலக்க , 2015.04.23 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்திற்குமாரன் எழுதிய அறுதி உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுறுதியின் தாயுறுதியாகிய 17ம் இலக்க 2004.02.14ம் திகதி பிரசித்த நொத்தாரிசு திரு. நா. கனகலிங்கம் (கொழும்பு) ஆங்கிலத்தில் எழுதிய வெளிப்படுத்தல் உறுதியின் தமிழ்மொழி பெயர்ப்பில் பாமதி பரமேஸ்வரன் என்பவரால் வெளிப்படுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது. இவ்வுறுதியில் குறித்த ஆதனடாப்பில் வரையறுக்கப்பட்டுள்ள ஆதனமானது இச்சாதன வெளிப்படுத்தல்காரராகிய என்னால் கடந்த 25 ஆண்டு காலப் பகுதிக்கு மேலாக எவ்வித தங்குதடைகள் மற்றும் இடையூறுகள் இல்லாது இயல்பாக ஆட்சி செய்யப்பட்டுவருகின்றது என்றும், இவ்வாதனத்தில் எனது சொந்த செலவில் பயிரிட்டுப் பராமரித்து வருகின்றேன் எனவும், இவ்வாதன வருமானங்கள் எனது சொந்த தேவைகளுக்காக எடுத்துக்கொள்வதுடன் இன்னொருவருக்கு எக்காலத்திலும் வாடகையோ, கொடுப்பனவுகளோ செலுத்தவில்லை எனவும், மேலும் இவ்வாதனமானது பகுதியாகவோ முழுமையாகவோ இன்னொருவரால் ஆட்சிக்குட்படுத்தப்படவில்லை எனவும், எவ்வித பிசகு தடைகளுக்கட்படா எனது நீண்ட கால ஆட்சிக்குட்பட்டிருந்த ஆதனமெனவும் இத்தால் வெளிப்படுத்துகிறேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறித்த ஆதனத்தினை தற்போதைய உரிமையாளர் இராஜரூபினி நிரஞ்சன் எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள், தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இராஜரூபினி நிரஞ்சன் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை எந்தவகையிலும் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

# இலங்கைத் தமிழர் விவகாரம் இந்தியாவின் அரசியல் உத்தி

*அரசு கவனம் செலுத்தாது என்கிறார் சுசில்*

கொழும்பு,மார்ச் 18

இலங்கைத் தமிழர்களின் விவகாரம், தென்னிந்தியாவின் தேர்தல் களத்தில் பிரதான பிரசாரமாக மாற்றப்பட்டுள்ளது. அங்கு தேர்தல் முடிவடைந்த பின்னர் அனைத்தும் மறக்கப்பட்டுவிடும். இது குறித்து இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டிய தேவையில்லை என்று தொலை நோக்கு கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இந்திய அரசியல் கட்சியொன்று ஈழம் தொடர்பில் முன்வைத்துள்ள கருத்து, தேர்தல் முடிவடைந்த பின்னர், மறக்கப்பட்டுவிடும்.



காலம் காலமாக இவ்வாறான தன்மையே காணப்படுகிறது.

பெரும் போராட்டத்துக்கு மத்தியில் 30 வருட காலப் போர் நிறைவடைந்துள்ளது.

நாட்டில் தேசியப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே நாட்டில் இனியொருபோதும் பிரிவினைவாதச் செயற்பாடுகள் எவ்வழிகளாலும் தோற்றம் பெறாது. - என்றார். (க-இ)

# ரஷ்யாவிடம் ஏழு மில்லியன் தடுப்பூசிகள் கொள்வனவு

கொழும்பு, மார்ச் 18

ரஷ்யா தயாரிக்கும் 7 மில்லியன் ஸ்பூட்னிக் வி கொரோனாத் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ய இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் தேசிய மருந்தாக்கல் ஆணைக்குழு அவசர பயன்பாட்டுக்காக ஸ்பூட்னிக் வி தடுப்பூசிக்கு இந்த மாத தொடக்கத்தில் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அதனடிப்படையில் ரஷ்யாவிலிருந்து ஸ்பூட்னிக் வி தடுப்பூசியின் முதல் தொகுதியை இலங்கை பெறலாம் என்று ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது இந்தியாவிலிருந்து பெறப்பட்ட ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா கொரோனாத் தடுப்பூசி பொதுமக்களுக்கு செலுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# மரண அறிவித்தல்

கிறிஸ்து எனக்கு ஜீவன்: சாவு எனக்கு ஆதாயம். (பிலிப்பியர் 1:21)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 . 03 . 1954 | 17 . 03 . 2021 |



## அருட்திரு வண. ஜோசப் வில்லியம் யோகராஜா

**(மெதடிஸ்த திருச்சபை - மட்டக்களப்பு - Area Minister )**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட ஜோசப் வில்லியம் யோகராஜா அவர்கள் (17.03.2021) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப் மேரி செல்லம்மா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஜோசப் பென்சமின், மாகிறேற் (சாவகச்சேரி) ஆகியோரின் மருமகனும், திவியத்தின் அன்புக் கணவரும், ஜோய் வில்லியத்தின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஜோசப் யோகராணியின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் உடல் இன்று (18.03.2021) காலை 8 மணிமுதல் நண்பகல் 2 மணி வரை யாழ்ப்பாணம் சென். பீற்றர் மெதடிஸ்த திருச்சபையின் ரிம்மர் மண்டபத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபையின் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**அருட்திரு K.A.செல்வநாயகம்**
**மைத்துனர் -0770639711**

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 • 07 • 1975



இறப்பு 17 • 03 • 2021

# மணிவண்ணன் ஜெயந்தினி

மீசாலை மேற்கு வாகையடியை பிறப்பிடமாகவும், சோலையம்மன் கோவில் வீதி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட மணிவண்ணன் ஜெயந்தினி நேற்று (17.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு பூரணம் தம்பதியினரின் அன்பு மகளும், அருமைத்துரை சந்திரா தம்பதியினரின் அன்பு மருமகளும், மணிவண்ணனின் அன்பு மனைவியும், விந்துஷன், விதுர்ஷன், மவீனா ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலினி, யோகேஸ்வரி (ஜேர்மனி), ஜெகதாஸ், பிரேமதாஸ், குகதாஸ், குபேந்திரன், விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாலதி, அருந்தவரூபன், கயேந்திரன், அரவிந்தன், மோகனரூபா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18.03.2021) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் சோலை அம்மன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோலை அம்மன் கோவில் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## 'அரசியல் பழிவாங்கல்' அறிக்கை சபையில் இரு நாள்கள் விவாதம்!

கொழும்பு,மார்ச் 18

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

அதற்கமைவாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் விவாதத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் கூடியது. இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-44)

## பிணைமுறி மோசடிக்கு குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு,மார்ச் 18



மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக, சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா வால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு மார்ச் 29 மற்றும் 31 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பிணை முறி மோசடி தொடர்பாக, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. சட்டமா அதிபரின் கோரிக்கைக்கு அமைய மத்திய வங்கி மோசடி தொடர்பில் விசாரணை செய்ய இரு நீதிமன்ற தீர்ப்பாயங்கள் கடந்த மாதம் நியமிக்கப்பட்டன.

குறித்த வழக்கில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணநாயக்க, மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், அர்ஜுன் அலோசியஸ் மற்றும் 8 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (க-இ)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்


## அமரர் கந்தையா நவரட்ணம் (நவம்)

தோற்றம்
02.11.1952

மறைவு
16.02.2021



அன்பு வழியில் எம்மை அரவணைத்து
ஆருயிராய் நேசித்து ஆசீர்வதித்து
இன்பமிக நல்லறமாம் இல்லறத்தை
சிறமே தலைமையில் ஈடேற்றி
ஆழக் கால் பதித்து நீர் சுற்றித்திரிந்த
வீதியெல்லாம் பொலிவிழந்து போனதப்பா.
பார்க்கும் இடமெல்லாம் தம் சிரிப்பொலியும்
புன்னகை வதனமும் தான் கேட்குதப்பா
உம் பாசமான நினைவுகள் எம்மை
தினம் தினம் அழவைக்குதப்பா
கனவிலும் நினைவிலும் நித்தம்
நீங்கள் வருகின்றீர்கள் அப்பா
ஆட்டோச் சத்தம் கேட்கையில் நீங்களோ
என்று எம் உள்ளம் ஏங்குதப்பா.
இறப்பு என்பது நியதி என்றாலும் ஏனோ
எம் உள்ளம் ஏற்க மறுக்குதப்பா.
உங்களின் அழகுருவம் கண்டதாலோ
காலனும் உம்மை அழைத்தானோ?
நாட்கள் பல உருண்டோடினாலும்
உம் நினைவுகள் அழிந்திடுமோ!
ஏக்கமுடன் நாம் இருப்போம்
எம் அப்பாவின் நினைவுகளோடு
உம் ஆத்மா சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



கடந்த 16.02.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குலதெய்வம் அமரர் கந்தையா நவரட்ணம் (நவம்) அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று (18.03.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

38, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# சுற்றுச்சூழல் அறிக்கை கிடைத்ததும் காணி விடுவிப்பு

## வனவளத் திணைக்களத்தினர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, மார்ச் 18**

**முல்லைத்தீவு நித்தகைக் குளத்தின் கீழான காணிகள் சுற்றுச் சூழல் அறிக்கை கிடைத்தால் விடுவிக்கப்படும் என்று வனவளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.**

இந்தக் காணிகளை வனவளத் திணைக்களம் எல்லைப் படுத்தி இருப்பதன் காரணமாக காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது என்று வனவளத் திணைக்கள அதிகாரியிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு அவர் பதிலளிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சுற்றுச் சூழல் அறிக்கை கிடைக்கப் பெற்றால் காணிகளை விடுவிக்க முடியும். சுற்றுச்சூழல் அறிக்கையை சுற்றுலா அதிகார சபை அறிக்கையிட்ட பின்னர் மேலதிக நடவடிக்கை மேற்கொள்வது எனவும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இதேவேளை, ஆறுமுகத்தான்குளம் கிராமத்தில் வாழ்கின்ற 110 குடும்பங்கள் வயல் காணிகளற்ற நிலையில், நித்தகைக்குளம், வீரங்குளம் ஆகிய குளங்களின் கீழுள்ள வயல் நிலங்களை தமக்கு வழங்குமாறு கோரி கடந்த ஐந்தாண்டுகளாக தொடர்ச்சியாக போராடி வருகின்றனர்.

நித்தகைக்குளம் புனரமைக்கப்பட்டு வயல் காணிகள் வழங்கப்படுமானால் இந்தப் பகுதியில் வாழ்கின்ற வயல் நிலங்களற்ற குடும்பங்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-13)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 35 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதலாம் நாள் (24.02.2021) அன்று பட்டப்பின்டிப்ளோமா (PGDE) பட்டம் பெற்ற எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி.சர்மினி குகச்சந்திரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பட்டங்கள் பெற்று பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்.**
**யா/யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை.**


# பிரதேச செயலர்களுக்கு எதிராக ஊழல், மோசடி முறைப்பாடுகள்

கொழும்பு, மார்ச் 18

பிரதேச செயலர்களுக்கு எதிராக சுமார் 200 ஊழல், மோசடி குற்றச்சாட்டுகள் கிடைத்துள்ளன என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆ.ர்.ஆ. சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிராம அலுவலர்கள் தொடர்பிலும் 200 க்கும் அதிகமான முறைப்பாடுகள் அமைச்சுக்கு கிடைத்துள்ளன. குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசாரணைகளில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ஐ-இ)

# தென்மராட்சியில் அகால மரணங்கள்

சாவகச்சேரி, மார்ச் 18

தென்மராட்சி பிரதேசத்தில் இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து முதல் 75 நாட்களுக்குள் 39 அகால மரணங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மரணங்கள் கொலை, தற்கொலைகள், மாரடைப்பு மற்றும் விபத்து ஆகியவற்றினால் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-9)


# கேள்வி அறிவித்தல்

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை (PSDG) - 2021

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வட மாகாணம்.

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது மாகாணசபை நிதியின் ஒருபகுதி கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைத்திட்டத்திற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு** கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உரிய கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C8/ C7 தரத்தில் **கட்டடம், வீதி (அட்டவணைப்படி)அமைப்பிற்கான** CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு **புதுக்குடியிருப்பு பிரதேச சபை (தொலைபேசி: 0212290847/0212291023** e.mail:- pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 14.30 மணி வரை 01.04.2021 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை எனும் இடத்திலிருந்து 18.03.2021ம் திகதியிலிருந்து 01.04.2021**ம் திகதி** வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2000.00 (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 01.04.2021ம் திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77(எழுபத்தேழு–17.06.2021) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/ Plan/PSDG/01/ 01/ 2021 | Construction of Thurkai Amman Kovil Road Drainage at kompavil (0.4 Km) (0-400m) Puthukkudiyiruppu Pradeshiya Sabha | 4.610 | 90 நாட்கள் | C 8/C7 (வீதி) | 46,500.00 | 15.07.2021 |
| NP/14/44(04)/ Plan/PSDG/02/ 02/ 2021 | Construction of Compost Yard for Puthukkudiyiruppu Pradeshiya Sabha (G.N:Mallikaiththivu) | 3.691 | 90 நாட்கள் | C 8/C7 (கட்டடம்) | 37,000.00 | 15.07.2021 |

11) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, **புதுக்குடியிருப்பு** அலுவலக கட்டடத்தில் 25.03.2021அன்று மாலை 02.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.
12) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

தலைவர்,
பிரதேசசபை பெறுகைக்குழு
புதுக்குடியிருப்பு பிரதேசசபை.
புதுக்குடியிருப்பு
18.03.2021.


# 25 லட்சம் மதிப்பிலான தங்கச்சங்கிலிகள் திருட்டு

கொழும்பு,மார்ச் 18

தங்க நகைகளை வாங்கப் போகின்றோம் எனப் பாசாங்கு செய்து, மூன்று தங்கச் சங்கிலிகள் திருடப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி 25 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் எஹெலியகொடப் பிரதேசத்தில் உள்ள நகையகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. நகையகத்துக்கு வந்த நபரொருவர் அங்கிருந்த ஊழியரிடம் தான் நகை வாங்குவதற்கு வந்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார். அதன்போது, நகையக ஊழியர் மூன்று தங்கச் சங்கிலிகளை அவருக்குக் காண்பித்துள்ளார். சந்தேகநபர் அவற்றை எடுத்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்று போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்கள் மற்றும் ஒழுங்கமைப்பட்ட குற்றக்குழுவினரால் மேற்கொள்ளப்படும் நகைக் கொள்ளை, திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனவே நகைகளை அணிந்து வீதிகளில் செல்லும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரித்துள்ளார். (க-இ)


### மரண அறிவித்தல்



**நாகலிங்கம் சதானந்தன்**

**தோற்றம் 21.02.1966 மறைவு 16.03.2021**

நாகலிங்கம் சதானந்தன் (பாலுத் தம்பி) அவர்கள் (16.03.2021) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவஞானம் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், நந்தினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், றம்மியா (வயம்ப பல்கலைக்கழகம்), திவ்வியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2021) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கலைவாணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 936 1300**

**தகவல்: குடும்பத்தினர்.**

## 46/1...

நல்லூர் கிட்டுப்பூங்காவில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு எழுச்சிப் பேரணி ஆரம்பமானது. அங்கிருந்து பருத்தித்துறை வீதி வழியாக பேரணி நகர்ந்தது. நல்லூர் ஆலய முன்றல் ஊடாகச் சென்று தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இறுதியாக நல்லை ஆதீனத்தின் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்ற இடத்தில் பேரணி முடிவுற்றது. இந்தப் பேரணியில் தமிழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் அணி திரண்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் உரிமைக் கோசங்களை விண்ணதிர எழுப்பினர்.

பேரணியின் முடிவில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு, வெளிநாடுகளின் இராஜதந்திரிகளுக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**ஆயுதமற்ற போர்**

ஆயுதம் மௌனிக்கப்பட்ட சூழலில் இலங்கை அரசு முழுமையான கட்டமைப்புசார் இனவழிப்புப் போரை வடக்கு கிழக்கில் தொடுத்துள்ளது. ஆயுதங்கள் அற்ற போர் முனைகள் வடக்கு கிழக்கில் உருவாக்கியுள்ளன. ஈழத் தமிழர் பண்பாட்டின் மீது, பொருளாதாரத்தின் மீது, வரலாற்றின் மீது, தொல்லியல் மீது, ஆள்புல கட்டுறுதியின் மீது, தமிழ் அடையாளத்தின் மீது என்று ஈழத் தமிழ்த் தேசத்தின் ஒவ்வொரு கட்டமைப்பின் மீதும் அழிப்பு நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

தமிழினத்தின் மீதான இனப்படுகொலையை முற்றாக மறுதலித்து, நிராகரித்து வரும் அரசு, இலங்கையை சிங்கள பௌத்த தேசமாக மட்டுமே கட்டமைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

வடக்கு கிழக்கை இராணுவ மயப்படுத்தி தமிழினத்தின் மீதான ஏகாதிபத்தியத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. தமிழினத்தின் மீதான இனப்படுகொலைக்கு நீதி வேண்டி கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக ஜனநாயக வழியில் தன்முனைப்பான போராட்டத்தை ஈழத் தமிழர்கள் முன்னெடுத்து வருகின்றார்கள்.

**ஐ.சி.சி.**

நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை பாதிக்கப்பட்ட மக்கள் விரும்பாத நிலையிலும் அரசு திணித்து வருகின்றது. ஆரம்பத்திலிருந்தே பாதிக்கப்பட்ட ஈழத் தமிழினத்துக்கு சர்வதேச விசாரணைப் பொறிமுறையூடாகவே நீதி கிடைக்க முடியும் என்ற நம்பிக்கையை எமது பட்டறிவின் அடிப்படையிலேயே சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறிவந்துள்ளோம். இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சி.சி.) பாரப்படுத்துவதன் ஊடாக அல்லது வேறு சர்வதேச நீதிமன்ற விசாரணைகள் மூலமாக மட்டுமே தமிழினப் படுகொலைக்கு நீதி கிடைக்கும் என்று ஆணித்தரமாக நம்புகின்றோம். இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ள நிலையில் வடக்கு மற்றும் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களாகிய நாங்கள் பின்வரும் கோரிக்கைகளை சர்வதேச சமூகத்திடம் முன்வைக்கின்றோம்.

**கோரிக்கைகள்**

தமிழ்த் தேசத்தின் மீதான சிங்கள பௌத்த மயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும் என்பதுடன், இராணுவ மயமாக்கலும் நீக்கப்படல் வேண்டும்.

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் மற்றும் இனவழிப்பு குற்றங்கள் உள்ளிட்ட பொறுப்புக் கூறல் விவகாரம் மனித உரிமைகள் பேரவையின் அனுசரணையுடன் அவற்றை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரை செய்ய வேண்டும்.

வடக்கு கிழக்கை தமிழரின் தாயகமாக அங்கீகரித்து தமிழர்கள் தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்பதை அங்கீகரித்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்படல் வேண்டும்.

இனப்படுகொலை மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டு குற்றவியல் வழக்குகளுக்கு இலங்கையைப் பாரப்படுத்தும் நோக்கில் சிரியாவில் நிறுவப்பட்டதைப் போன்ற ஒரு சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையை ஒரு வருட கால வரையறையுடன் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உருவாக்க வேண்டுமென்று பரிந்துரை செய்யப்படல் வேண்டும்.

இலங்கையில் தற்போதும் தொடரும் தமிழர் உரிமை மீறல்களைத் தொடர்ந்து கண்காணிக்க ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் இலங்கையில் கள இருப்பைக் கொண்டிருக்கவும் விசேட பொறிமுறையை உருவாக்கவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

மேற்படி விடயங்களை புறக்கணித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தயாரிக்கப்பட்டுள்ள 46/1 என்ற தீர்மான வரைபானது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பெயரால் தீர்மானமாக நிறைவேற்றப்படுவதை நாம் அடியோடு நிராக ரிக்கின்றோம், என்றுள்ளது.

(ஒ.ப.26,319,320)

## வடக்கில்...

ளில் மூன்று பேர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கலைப்பீட மாணவர்கள் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் நேற்று 262 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் எவருக்கும் தொற்று உறுதி செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் 444 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவர்களில் 6 பேருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட யாழ். வீதியைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமிக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வசிக்கும் காரைநகர் இ.போ.ச. சாலையில் பணியாற்றும் திருத்துநர் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மல்லாவி மீன் சந்தை தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இருவருக்கு தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது..

கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் பெண் ஒருவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து 395 பேரின் மாதிரிகள் முல்லேரியா ஆய்வுகூடத்துக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் மூவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மூவரும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள். கிளிநொச்சி, புத்தளம் மற்றும் மாத்தறையைச் சேர்ந்த மூவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்' - என்றார். (ம-26)

## தமிழர்...

விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

சர்வதேசத்திடம் நீதிகோரி யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் மக்கள் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் தமிழ் மக்கள் முன்னெடுக்கும் உணர்வெழுச்சிமிக்க அறவழிப் போராட்டங்களை நாம் மதிக்கின்றோம். சர்வதேச சமூகமும் இந்தப் போராட்டங்கள் தொடர்பில் தமிழ் மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் அதிக கரிசனை செலுத்த வேண்டும்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட பிரேரணை வரைபையும் நாம் வரவேற்கின்றோம். இலங்கை தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கொண்டுள்ள கரிசனைகளையும் நாம் வரவேற்கின்றோம்.

பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து இலங்கை நழுவ முடியாத வகையில் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் வரவேற்கின்றோம். எனவே, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேசம் தாமதமின்றி நீதியை வழங்கியே தீரவேண்டும்' என்றார். (ம-22)

## இந்திய...

வும் இந்தியா உள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்பு மிகவும் இறுக்கமானது. எனவே, ஐ.நா.வில் இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு எதிராக இந்தியா வாக்களித்து எமது நாட்டை ஆதரித்தே தீர வேண்டும் இவ்வாறு பொதுஜன முன்னணியின் தவிசாளரும் கல்வி அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இந்தக் கடமையிலிருந்து இந்தியா விலகாது என நான் நம்புகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எமது அரசு சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் நெருக்கம் என்றும், இந்தியாவைப் பகைக்கின்றது என்றும் எதிரணியினர் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர்.

இந்தியாவுடன் எமது அரசு மிகவும் நெருக்கமாகவே உள்ளது. அபிவிருத்தி விடயங்களில் இலங்கையும் இந்தியாவும் நேரில் பேசியே முடிவெடுக்கின்றன. தனிப்பட்ட முடிவு எதையும் எமது அரசு எடுப்பதில்லை.

இலங்கையின் அபிவிருத்தி விடயங்களில் இந்தியாவும் சீனாவும் அதிக ஈடுபாடு கொண்டுள்ளன. எனவே, இரு நாடுகளுக்கும் அபிவிருத்திகளை எமது அரசு பகிர்ந்தளிக்கின்றது. இதை அறியாமல் எதிரணியினர் அரசியல் இலாபங்களுக்காக உளறுகின்றனர்' என்றார். (ம-22)

## கஞ்சாவை...

றச்சாட்டில் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த 38 வயதுடைய முச்சக்கர வண்டிச் சாரதியே யாழ்ப்பாணம் நகரில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார். சந்தேக நபரிடமிருந்து 2 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பல இடங்களுக்கும் கஞ்சா போதைப்பொருளை விநியோகித்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-26)

## இலங்கையை...

ளும் தமிழ் அரசியல்வாதிகளும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கையை நிறுத்துமாறு அவர்களிடம் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம் இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். சர்வதேசத்திடம் நீதிகோரி யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் மக்கள் பேரணி முன்னெடுக்கப்பட்டது. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பயங்கரவாதத்துக்கு எதிரான போர் நிறைவுக்கு வந்த பின்னர் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் நடைபெறும் காலங்களில் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் அரசுக்கு எதிராகவும் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் பெரும் எடுப்பில் போராட்டங்களை நடத்துவது வழமை. ஆனால், இம்முறை இந்தப் போராட்டங்கள் உச்சமடைந்துள்ளன.

நாட்டு அரசையும் பெரும்பான்மையினத்தவர்களாக இருக்கும் சிங்களவர்களையும் சீண்டிப் பார்க்கும் வகையிலேயே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் பின்னணி யில் புலம்பெயர் அமைப்புகளின் கோடிக்கணக்கான நிதிதான் உள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு வழங்கியுள்ள சுதந்திரத்தை வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூகம் தவறான வழியில் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்'- என்றார். (ம-22)

## பிரிட்டன்...

வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை இறுதிசெய்யப்பட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிடம் வழங்கப்பட்டுள்ள நிலையிலேயே மேற்படி விவாதம் இன்று நடைபெறுகின்றது. பிரிட்டன் நாடாளுமன்றின் அனைத்துக் கட்சிகளினதும் தமிழ்ப் பிரதிநிதிகள் குழு இந்த விவாதத்தை ஏற்பாடு செய்துள்ளது. (ம)

# டிப்பர் சில்லு உடைந்ததால் ஹன்ரரும் நொருங்கியது

## சாரதிகளுக்கு படுகாயங்கள்





பூநகரி, மார்ச் 18

**டிப்பர் வாகனத்தின் முன் சில்லு உடைந்ததால் கட்டுப்பாட்டை இழந்து, பயணித்துக்கொண்டிருந்த ஹன்ரர் ரக வாகனத்துடன் மோதுண்டதில் இரண்டு வாகனங்களும் சேதங்களுக்கு உள்ளாகின. அவற்றின் சாரதிகளும் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

இந்த விபத்து பூநகரி கிளிநொச்சி பிரதான வீதியில் குடமுருட்டி பாலத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நோக்கி சல்லிக் கற்கள் ஏற்றிச்சென்ற டிப்பர் ரக வாகனமும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற ஹன்ரர் ரக வாகனமுமே விபத்துக்குள்ளாகின.

இதில் இரண்டு வாகனங்களின் சாரதிகளும் படுகாயமடைந்தனர். அவர்கள் இருவரும் கிளிநொச்சி மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-319,ரி2,12)


**Techno World**
தொழில்நுட்பக் கல்லூரி

**A/L 2023**
**தொழினுட்பபிரிவு ஆரம்பம்**
20.03.2021 சனி காலை 09 மணி
- பொறியியல் தொழினுட்பம்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்

தொடர்புகளுக்கு: 077 017 5346


பஸ் – ரயில் விபத்தில்

# உயிரிழந்த மாணவனின் இறுதிக்கிரியை இன்று!

மன்னார், மார்ச் 18

மன்னார்பியர் பகுதியில் இடம்பெற்ற பஸ் - ரயில் விபத்தில் தலைமன்னார் பியார் பகுதியைச் சேர்ந்த பாலசந்திரன் தருண் (வயது14) என்ற மாணவன் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

அந்த மாணவனின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று மாலை இடம்பெற்றன.

இந்த மாணவனின் உடலுக்கு தலைமன்னார்ப் பகுதி மக்கள், தலைமன்னார் பாடசாலை மாணவர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரச ஊழியர்கள் எனப் பலர் அஞ்சலி செலுத்தினர். அஞ்சலியின் பின்னர் அவரது உடல் மாலை 3 மணியளவில் தலைமன்னார் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ற-56)

முதலாம் பக்கத் தொடர்ச்சி

*ரவி...*

குறித்த வழக்கு, கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 8 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 2016ஆம் ஆண்டில் பிணைமுறி ஏலத்தின்போது, அரசுக்கு 3 ஆயிரத்து 698 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார் என்று தெரிவித்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 8 பேருக்கும் எதிராக சட்டமா அதிபரால் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை அடிப்படையாகக்கொண்டு அவர்களைக் கைதுசெய்து விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-22)

*அ'புரம்...*

இதே விடயம் அண்மையில் எழுப்பப்பட்டபோது, அமைச்சரவை ... க்ளஸ் தேவானந்தாவும், காணி அமைச்சருடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடிய பின்னர் ஆவணங்கள் அனுராதபுரத்துக்கு எடுத்துச் செல்லப்படாது என்று உறுதியளித்திருந்தார். ஆனால் அதன் பின்னரே ஆவணங்கள் கொண்டு செல்லப்பட்டிருந்தன. இவ்வாறானதொரு நிலையிலேயே அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வாழ்வாதாரக் குழுவின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட கூட்டுத்தொடர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே மஹிந்தானந்த அளுத்கமகே இவ்வாறு தெரிவித்தார். (ஒ.5)

## தாலிக்கொடி தவறவிடப்பட்டுள்ளது

2021 - 03-11ம் திகதி சிவராத்திரி தினத்தன்று நாவற்குழி சிவபூமி - திருவாசக அரண்மனை வளாகத்தில் காலை 8.00 தொடக்கம் 12.00 மணி வரையுள்ள நேரத்தில் பிள்ளையார் தாலியுடன் 4 1/2 பவுண் கொடியும் தவற விடப்பட்டுள்ளது.

இதனை கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கும் போது தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

077 288 1066
077 593 8567

இல.33, வல்லிபுனம், புதுக்குடியிருப்பு.


**வேலையாள்கள் தேவை**
யாழ்நகரிலுள்ள உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர் (ஆண்), ரொட்டி வேலையாள் (ஆண்), சமையல் காரர் (ஆண்/பெண்) தேவை. (தங்குமிட வசதி செய்து தரப்படும்)
077 766 0776, 077 036 6388

**விற்பனைக்கு**
ரியூட்டறி வாங்கு மேசைகள் 45w AmP. Speakers விறாக்கிகள், மேடைகள், கரும்பலகைகள் விற்பனைக்குண்டு.
தொடர் : 077 230 6653

**A/L - 2K23**
(கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்)
மார்ச் - 20
காலை 9.00 மணி
DMI JAFFNA

**காணி விற்பனைக்கு**
நல்லூர் - செம்மணி வீதியில் நாயன்மார் கட்டில் 4 பரப்பு காணி விற்பனைக்கு இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். (மெயின் றோட்டுடன் காணி)
தொடர்பு: 077 623 4204
077 288 0152

**வேலையாட்கள் தேவை**
சாவகச்சேரி வீதி மந்திகையில் இயங்கும் ஸ்ரீதேவி சைவ உணவகத்திற்கு றொட்டி வேலை தெரிந்தவர், மற்றும் உணவு பரிமாறுபவர் தேவை. தங்குமிட வசதி உண்டு. தங்கி நின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு 077 848 8619


# மரண அறிவித்தல்

பிறப்பு 16 . 10 . 1939



இறப்பு 17 . 03 . 2021

சங்கீதபூஷணம், கலாபூஷணம்

## திரு. சுப்பையா கணபதிப்பிள்ளை

**(ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்-அழகியல்)**

நெல்லியானைப் பிறப்பிடமாகவும் பொன்னாலையையும் சுழிபுரத்தையும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பையா கணபதிப்பிள்ளை நேற்று (17.03.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கார்த்திகேசு சின்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சந்திரபூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரராசா (முன்னாள் பிரதேச செயலர் - சங்கானை) மற்றும் திரு.கா.சந்திரபாலன் (ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்) காலஞ்சென்ற சந்திரவரதன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கேசவதாஸ் (மலேசியா), கமலலோசனி மற்றும் திருமதி ச.சகலகலாவல்லி (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர், ஆரம்பக்கல்வி) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பறாளை வீதி, சுழிபுரத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 36 ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.